Free Circulation Germany- England
மணி: 74 - ஓசை: 336 புரட்டாசி. September. 2024

Orientalisch
Textilien &
Schmuck
34 ஆவது ஆண்டு நிறைவு
தரமும், மலிவும், ஒரே இடத்தில்

Königswall 16 (Am Hbf) 44137 Dortmund
Tel:0231 162377

# வெற்றிமணி


Vettimaniy
ESTD 1950
30 TH years IN EUROPE
Successful Publishing
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்.B.F.A

# நிச்சயமற்ற தேர்தல் கள நிலையில் தமிழ்ப் பொது வேட்பாளர் வருகை!

இலங்கையில் இருந்து ஆர்.பாரதி

## நீங்கள் எந்தப் பொருளையும் தொட முடியாது!





## குருதி வழியும் திரைகள்

நோர்வேயில் கலாசாதனா மாணவிகளின்

## 'தீதும் நன்றும் -Good and Evil'



மெய்ப்பொருள் காண்பது அ(ரிது)றிவு.

இதழ்: 336








# 'தீதும் நன்றும்- Good and Evil' ஆடல் அரங்கேற்றம்!

லூபன் சிவராஜா (நோர்வே)

நடன ஆசிரியரும் கலாசாதனா கலைக்கூட இயக்குநனருமான கவிதா லட்சுமியின் மாணவிகள் ஹர்ணி நகுலேஸ்வரதாஸ் மற்றும் தீபிகா மகேசன் ஆகியோரது ஆடல் அரங்கேற்றம் கடந்த 17.08.25 நோர்வே Sandvika Teater அரங்கில் இடம்பெற்றது.

'தீதும் நன்றும்' எனும் கருப்பொருளில் (Thematic Presentations) இந்த ஆடல் அரங்கேற்றம் நிகழ்த்தப்பட்டது.

## கருப்பொருள்

வழமையான (சடங்கு ரீதியான) பரத நாட்டிய அரங்கேற்றங்களைக் கலாசாதனா கலைக்கூடம் நிகழ்த்துவதில்லை. 2014ஆம் ஆண்டிலிருந்து நடன மாணவிகளின் அரங்கேற்ற நிகழ்வுகளை கருப்பொருள் சார்ந்தவையாகவே வடிவமைத்து வருகின்றது. இதற்குமுன் (2018) சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய பதினோராடல், பாரதியின் தமிழிசை (2015), தமிழ் இலக்கியத்தில் பெண் (2014) எனும் பல்வேறு கருப்பொருள் சார்ந்த அரங்கேற்றங்களை நிகழ்த்தியது. அவை பார்வையாளர்களிடத்தே வரவேற்பைப் பெற்றிருந்தன.

இம்முறை கவிதா கண்டடைந்த கருப்பொருள் 'தீதும் நன்றும்'

புனைவுகள் மற்றும் காப்பியங்களின் கிளைக் கதைகள், எதிர்மறைப் பாத்திரங்கள் குறித்த வியாக்கியானங்கள், மறுவிசாரணைகளை நிகழ்த்துகின்ற வகையில் இந்த அரங்கேற்றத்தின் வெளிப்பாடாக அமைந்தன.

பாத்திரச் சித்தரிப்புகள் குறித்த புதிய பார்வை தொடர்பான தேடலாகவும், கதைசொல்லாகவும், பாத்திரங்களின் உளவியலைக் கண்டடைவதாகவும் இம்முயற்சியைக் கொள்ளமுடியும்.

## தீதும் நன்றும்

கம்பராமாயணம், மகாபாரதம் போன்ற காப்பியங்களில் எதிர்மறைப் பாத்திரங்களாக - அதாவது தீய சக்திகளாகச் சித்தரிக்கப்பட்ட பல பாத்திரங்கள் உள்ளன. இலக்கியங்களை வாசிக்காதவர்கள்கூட அப்பாத்திரங்களை


07 ஆம் பக்கம் பார்க்க...




வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை : 336



ஆரம்பம்: 1950

ஸ்தாபகர்

அமரர் மு.க.சுப்பிரமணியம்

( முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்

'ஓவியக்கலைவேள்'

கலாநிதி

மு.க.சு.சிவகுமாரன்

Chief Editor:

Dr.M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333

+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி'

தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடமிருந்து வெற்றி தானாகவே விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd

Company No: 8876276




# நிச்சயமற்ற தேர்தல் கள நிலையில் தமிழ்ப் பொது வேட்பாளர் வருகை!




இலங்கையிலிருந்து

ஆர்.பாரதி


தமிழ்ப் பொதுவேட்பாளராக களம் இறங்கியிருக்கும் பா.அரியநேத்திரனுக்கு ஆதரவான பரப்புரைகள் பொத்துவில் முதல் பொலிகண்டி வரை நன்கு திட்டமிட்ட முறையில் முன்னெடுக்கப்படவிருக்கின்றது. "வெல்வதற்காக அல்ல! தமிழ் மக்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்துவதற்கு" ஜனாதிபதித் தேர்தல் களத்தில் இறக்கப்பட்டுள்ள அரியநேத்திரனுக்கு கணிசமான வாக்குகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக பரப்புரை உத்திகள் பலவற்றை தமிழ்த் தேசிய பொதுச் சபை வகுத்திருக்கின்றது.

அதன் ஒரு பகுதியாக ஓகஸ்ட் 18 ஆம் திகதி தனது முதலாவது பிரசாரக் கூட்டத்தை நடத்திய அரியநேத்திரன், செப்ரெம்பர் 19 ஆம் திகதி வரையில் தனது சூறாவளிப் பிரசாரத்தை மேற்கொள்ளவிருக்கின்றார். இறுதிக் கூட்டம் மட்டக்களப்பில் நடைபெறவிருக்கின்றது. இதனைவிட சமூக ஊடகப் பரப்புரைகள், பொக்கற் கூட்டங்கள், சந்திப்புக்கள் என பல குழுக்கள் களமிறக்கப்படவுள்ளன.



தமிழ்ப் பொது வேட்பாளர் வெற்றிபெறப் போவதில்லை என்றாலும், ஜனாதிபதித் தேர்தல் களத்தில் அவர் ஏற்படுத்தப்போகும் தாக்கம் எந்தளவுக்கு இருக்கும் என்பதுதான் இப்போது பிரதான சிங்கள வேட்பாளருக்குள்ள கேள்வி! இராஜதந்திர வட்டாரங்களும் இந்த நகர்வை உன்னிப்பாக அவதானிக்கின்றன.

வழமையாக இரு முனைப் போட்டியாக இருக்கும் ஜனாதிபதித் தேர்தல் இம்முறை மும்முனைப் போட்டியாக அமையும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், நாமல் ராஜபக்ஷ களத்தில் இறங்கியமையும், ராஜபக்ஷ சகோதரர்கள் அனைவரும் நாமலுக்கு ஆதரவாக களத்தில் இறங்கியிருப்பதும், தேர்தல் களத்தை நான்கு முனைப் போட்டியாக மாற்றியுள்ளது.

அதேவேளையில், கடந்த கால ஜனாதிபதித் தேர்தல்களைவிட அதிகமான வேட்பாளர்கள் இம்முறை களமிறங்கியிருக்கின்றார்கள். 39 வேட்பாளர்கள் களமிறங்கியிருக்கின்றார்கள். இதில் பெரும்பாலானவர்கள் சுயேச்சைகள். இந்த சுயேச்சைகளில் பலர் பினாமிகள். ஆவர்களும் வெல்வதற்காக களமிறங்கியவர்கள் அல்ல.

கருத்துக் கணிப்புக்களின் படி, இரண்டு பிரதான வேட்பாளர்களான ரணிலுக்கும், சஜித்துக்கும் இடையில்தான் கடுமையான போட்டி உள்ளது. அடுத்தவர்களாக அநுரகுமார திசாநாயக்கவும், நாமல் ராஜபக்ஷவும் உள்ளார்கள். அதேவேளையில், எந்தவொரு வேட்பாளரும் 50 வீதமான வாக்குகளைப் பெறமுடியாத நிலை காணப்படுகின்றது. 40 வீதமான வாக்குகளை அண்மித்ததாகத்தான் பிரதான வேட்பாளர்கள் பெறுவார்கள் என்பதுதான் பிந்திய மதிப்பீடு.

ஜனாதிபதித் தேர்தலில் ஒருவர் வெற்றி பெறுவதற்கு 50 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற வேண்டும். அவ்வாறில்லை என்றால், மூன்றாவதாக வருபவரின்

27 ஆம் பக்கம் பார்க்க...





INNENSTADT WEST
தமிழர் அரங்கம்
ortel MOBILE
DORTMUND
தமிழர் தெருவிழா
Straßenfest der Tamilen 2024
06.09.2024
FR. 16:00 - 00:00
07.09.2024
SA. 11:00 - 00:00
08.09.2024
So. 12:00 - 19:00
3 நாட்கள்
வெள்ளி - சனி - ஞாயிறு
SCAN ME
Dortmunder U - Park der Partnerstädte
Park der Partnerstädte
Bundesstraße 54
westentor
Rheinische Str.
Gemeinsam in Vielfalt Der Integrationsrat
VKII RUHRBEZIRK e.V.
Stadtteil-Schule
SIVAN DIGITAL
TKD
VMDO
ஊடக அனுசரணை
வெற்றிமணி
அகரம்
தமிழ் டைம்ஸ் TAMIL TIMES
IBC தமிழ்
Lankasri
ETR
PAARPOM
எம்தமிழ்
tamil.nrw
0151633 633 33 | 0157 370 50 110 | 176 246 371 75 | 0151 279 909 90



# காணாமல் ஆக்கப்படும் கறுத்தக்கொழும்பான்



**கறுத்தக் கொழும்பு கொழும்பு மாவட்டத்தை குறிக்க பயன்படுவதாக கொள்ளக்கூடாது.**
**இப்படி ஒரு மயக்கம் இருந்தால் தெளிவு கொள்ள வேண்டும்.**

யாழ்ப்பாணம் என்ற உடன் நினைவுக்கு வருவது பனம் பழமும் கறுத்தக்கொழும்பான் மாம்பழமுமே என்றால் மிகை அல்ல. கோடைகாலத்துக்கறுத்தக்கொழும்பான் மாம்பழம் யாழ்ப்பாண சுண்ணக்கல் நன்னீரின் சுவையை திகட்டி பழச்சாறாக்கி விந்தை செய்யும் அதிசயம் கொண்டது

மாம்பழத்தை நேரடியாகவே மரத்தில் இருந்து மாம்பழமாக பெற்றுவிட முடியாது. ஏனெனில் பழங்களை வேட்டையாடி உண்ணவும் மேப்பம் பிடித்து கொறிக்கவும் கொத்தவும் அணில் பிள்ளைகளும் காக்கைக்கூட்டங்களும் கிளிப்பிள்ளைகளும் முந்திக்கொள்ளும். இரவில் வௌவால்களும் வேட்டையாட தொடங்கி விடும்.

இதனால் நன்றாக முற்றிய மாங்காய்களை செங்காய்களாக (பழுக்கும் பருவம்) இருக்கும் போதே நான்கில் மூன்று பங்கை நிலத்தில் விழாமல் பக்குவமாக பறித்தெடுத்தல் வழமை. மற்றைய ஒருபங்கு அணில்களுக்கும் பறவைகளுக்கும் விடுவதால் உயிரினப் பல்வகைமை காக்கப்படுகிறது.

பறித்த பழங்களை வைக்கோலால் அல்லது நெல்லுக்குள் அல்லது வேப்பிலையால் மூடிப்பழுக்க வைத்தல் இயற்கை முறை. அதில் சாப்பிடுவதற்கு போதியளவை எடுத்துக்கொண்டு, உற்றம் சுற்றத்துக்கும் பங்கிட்டுக் கொடுத்தும் விற்கக்கூடியதை விற்று வாழ்ந்தனர் யாழ்ப்பாணத்து மக்கள்.

கறுத்தக்கொழும்பான் மாம்பழத்தை பெரும்பாலும் தோல் நீக்கியும் நீக்காமலும் உண்ண முடியும். மாம்பழத்தின் கொட்டையில் இருக்கும் சாற்றை பற்களால் வறுகி வறுகி வெள்ளையாக்குதல் சிறுவர்முதல் பெரியவர்கள் வரை சுவைப்பதில் பேரின்பம் கொள்வர். அதெற்கெல்லாம் ஒரு கொடுப்பினை வேண்டும். இதனால் பற்களின் ஈறுகளில் மாமபழத்தின் தும்புகளும் சாறுகளும் படர்வதால் அவை உறுதி பெறுகின்றன. வெண்மை அடைகின்றன. தற்காலத்தில் நவநாகரிகம் என்ற போர்வையால் இந்த செயற்பாடுகள் அருகிவிட்டன.

பத்து ஆண்டுகளுக்கு முன்பதாக பெரும்பாலும் ஒவ்வொருவர் வீட்டு முற்றத்திலும் ஒரு மாமரம் இடம்பிடித்திருந்தது. இன்னார் வீட்டு மாம்பழம் சுவைமிக்கதென தேடி வேலியால் பறித்துண்ட சிறுவர்கள் ஏராளமாக இருந்தார்கள். பண்டமாற்றாக பகிர்ந்துண்டார்கள். எத்தனை பழங்கள் சாப்பிட்டோம் என்ற எண்ணிக்கை எல்லாம் யாரும் கணக்கிட இருப்பதில்லை.அமர்க்களமான கறுத்தக் கொழும்பானின் வாசனை கைகளிலும்



லதா கந்தையா
(இலங்கை)



Photo: shanthy

வாயிலும் கமகமக்கும். அண்மைக்காலத்தில் ஏற்பட்ட நிலத்துண்டாடல்கள் மற்றும் வீதி அகலிப்புகள் புணரமைப்புகளால் ஏற்பட்ட வளர்ச்சி வீட்டுக்குவீடு வீதியோரமாக கடைகளைக்கட்டி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுதல், கடைகளைக்கட்டி வாடகைக்கு விடுவதால் கிடைக்கும் பகுதியளவு அல்லது நிரந்தர வருபான வழிவகைகள் மற்றும் கழிவகற்றல் நெருக்கடிகளால் வகைதொகையற்று முற்றத்தை நிறைத்துநின்ற மாமரங்கள் தறிக்கப்பட்டு விட்டன.

மாஞ்சறுகுகளை அகற்றுவதற்கு இடப்பற்றாக்குறை மற்றும் சுகாதார பரிசோதகர்கள் கிராம அலுவலர்களினால் மாதந்தோறும் கண்காணிக்கப்படும் டெங்கு நுளம்பு பெருக்கம் போன்றவற்றை கட்டுப்படுத்துவதற்காக கொடுக்கும் நெருக்கடிகளும் மாமரங்களின் வெட்டுதலுக்கு ஒரு காரணமாகிவிட்டது.

பலர் வேலைகளுக்கு தூர இடங்களுக்கு செல்வோராகவும், குறுகிய துண்டாடல் நிலங்களானதால் அயல்வீடுகளுக்குள்ளும் பழுத்த இலைகள் சருகுகள் விழுவதால் அயல்வீட்டுக்காரர்கள் கொடுக்கும் அழுத்தம் காரணமாகவும் பலர் மாமரங்களை தறித்துள்ளார்கள்.

மட்டுமன்றி தென்பகுதியில் இருந்து வந்த சில வியாபாரிகள் மாம்பலகைகளில் மேற்கொள்ளும் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக தந்திரமாக மாமரங்களை கவர்ச்சிகரமான பண த்தை கொடுத்து வாங்கி தறித்துக் கொண்டு செல்வதும் அண்மைக்காலத்தில் வெளிச்சத்துக்கு வந்த உண்மையாகும். யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி கிளிநொச்சி முல்லைத்தீவு மன்னார் வவுனியா என இந்த கைவரிசை நீண்டிருப்பதானது கவலைக்கிடமானது. வடக்கு மாகாணத்தில் அன்றாடம் உழைத்துண்ணும் மக்களை மட்டுமன்றி படிப்பறிவில் மிகச்சிறந்த யாழ்ப்பாண மக்களையும் இந்த வியாபாரிகள் ஏமாற்றி கொண்டமை வியப்பானதே.

எங்கள் தொன்மைக்கனிகளில் ஒன்றான மாம்பழத்தில் பல்வேறு வகையான பயன்களும் நிறைந்து கிடக்கிறது. கோடைகாலத்தில் அதாவது சித்திரை தொடக்கம் ஆவணிவரையான காலப்பகுதியில் இவை அதிகமாகக்கிடைக்கும். வெப்பத்தை நன்கு உறிஞ்சிக்கனியும் பழங்களாக இருப்பதால் உடலுக்கு உறுதியை தரும் வல்லமை கொண்டவை. நீர்த்தன்மை அதிகளவு

08 ஆம் பக்கம் பார்க்க...




Luckyfly
நீங்கள் விரும்பிய நாட்களில் இலங்கை
சுற்றுலா செல்ல டிக்கெட் வசதி செய்து தருகிறோம்...
it's time to
TRAVEL
AND EXPLORE THE WORLD
SRI LANKA
SPECIAL TOUR
குடும்பத்துடன்
இன்ப சுற்றுலா
Travel The World
Explore your adventure with us
ஸ்ரீலங்கா
சென்றுவர குறைந்த
விலையில்
மகிழ்ச்சியாக செல்ல...
LUCKYFLY இணையதளத்தின்
மூலமாக உங்கள் விருப்பம் போல்
பயணம் இடத்தை
நீங்களே தேர்ந்தெடுக்கும் வசதியுடன்...
info@lucky-fly.de
www.lmtourslk.com
0234 2399032
0179 14 84892
தமிழர்களின்
பாரம் பரிய உணவு வகைகள்,
தங்குமிடம், வாகன ஒழுங்குகள்,
இலங்கை முழுவதும் பார்க்க
கூடிய சுற்றுலா இடங்கள்
அனைத்தும் சிறந்த முறையில்...
இன்றே அழையுங்கள்!
COLOMBO TO
JAFFNA
49€
TRANSPORT
CHARGES

02 ஆம் பக்கத் தொடர்ச்சி...

மேலோட்டமாகவேனும் அறிவர். அவை காலம்காலமாகக் கதைசொல்லல்கள், இலக்கியத் தழுவல்கள், மேற்கோள்கள், உவமைப்படுத்தல்கள் மூலம் பெரும் பான்மை சமூகத்தில் ஆழமாகப் பதிந்து விட்டன.

அவற்றின் மறுபக்கத்தையும் அப்பாத் திரங்களின் நியாயங்களையும் கருத் திலெடுக்காத வகையில் அவை பரவலாக நிலைபெற்றும்விட்டன.

மனித மனம், குண இயல்பு, வாழ்வின் அநுபவங்களையும் உணர்வுகளையும் செயற்பாடுகளையும் வெறுமனே கருப்பு-வெள்ளையாக, தீயது - நல்லது என்ற இருமைப் பார்வைக்கு ஊடாக மட்டும் பார்த்துவிட முடியாது. அப்படி அணுகிவிட வும் முடியாது.

தீதும் நன்றும் இரண்டறக் கலந்ததே மனமும் வாழ்வும்.





## நோர்வேயில் கலாசாதனா மாணவிகளின்

# 'தீதும் நன்றும்- Good and Evil' ஆடல் அரங்கேற்றம்!

### எதிர்மறைப் பாத்திரங்களின் கதைகள்

இந்த அரங்கேற்றத்தில் பரத நாட்டிய அரங்கேற்ற உருப்படிகளுக்கான கட்ட மைப்புக்குள் தாடகை, இராவணன், சூர்ப்பணகை, கூனி, சிகண்டி, சகுனி, பாஞ் சாலி ஆகிய புனைவிலக்கியப் பாத்திர ங்களின் கதைகளும் - சித்தரிப்புகளும் - மறுபக்கங்களும் - வியாக்கியானங்களும் எடுத்தாளப்பட்டிருந்தன.

தாடகை,கூனி ஆகிய பாத்திரங்களு க்கான பாடல்கள், உரையாடல்களை நான் எழுதியிருந்தேன்.. இராவணன், சகுனி பற்றிய பாடல்களை உமாபாலன் சின்னத்துரை எழுத, சிகண்டி, பாஞ்சாலி குறித்த பாடல்களைக் கவிதாவும் எழு தியிருந்தார். அருணாசலக் கவிராயர் படைத்த ஒரு பாடல் சூர்ப்பணகை காத லைச் சித்தரிக்கவும் எடுத்தாளப்ப ட்டிருந்தது. பரதநாட்டிய அரங்கேற்றத்திற் குரிய வடிவம் அப்படியே இருக்க, அதாவது அலாரிப்பு, கவித்துவம், வர்ணம், பதம், கீர்த்தனை, தில்லான எனவான ஆடல் வடிவங்களுக்கு ஊடாகவே புதிய பேசு பொருட்கள் பேசப்பட்டன. கவித்துவம் என்ற உருப்படிக்குள் மகாபாரத்தின் முக்கிய பாத்திரங்களில் ஒன்றான அரக்கியா கச் சித்தரிக்கப் பட்டிருக்கும் - பரவலாக அறியப்படாத தாடகையின் கதை சொல்லப்பட்டது.

கதை சொல்லல் வடிவத்திற்கு ஊடாக கூனியின் கதை நிகழ்த்தப்பட்டது.

கர்ணன் மீதான பாஞ்சாலியின் காத லும் இராமன் மீதான சூர்ப்பணகையின் காதலும் பதம் என்ற பரத உருப்படியாக தனித்தனியாக தீப்பிகா மற்றும் ஹர்ணி ஆகியோரால் ஆடப்பட்டன. சிருங்கார ரசம் நிறைந்தவையாக இவ்விரண்டு உருப்படிகளுக்கான ஆற்றுகைகள் அமைந்தன.

இராவனனின் கதை அப்பாத்திரத் தின் பல்பரிமாணப் பக்கங்களைப் பிரதி பலிக்கும் வகையிலான 'வர்ணம்' ஆக வடிவமைக்கப்பட்டிருந்தது. சிகண்டியின் கதையும் சகுனியின் கதையும் 'கீர்த்தனை' உருப்படிகளாக நிகழ்த்தப்பட்டிருந்தன.

### காட்சிப்படுத்தல்

ஒட்டுமொத்தமாக ஒவ்வொரு பாத் திரங்களினதும் செயல்களுக்கும், இயல்புகளுக்கும் காரணமாக அமைந்த அவர்களின் தரப்பு நியாயங்களும் உளவி யல்களும் வெளிப்படுத்தப்பட்டன. கருப் பொருளின் தலைப்பிற்கு அமைய பாத் திரங்களின் குணாம்சங்களும் அவற்றின் அக-புறச் சூழல்களும் பாடல்வரிகள், காட்சிப்படுத்தல், பாத்திரச்சித்தரிப்புகளிற் பிரதிபலித்தன. அதில் அழகியல், நேர்த்தி, கலைத்துவம் மிளிர்ந்தது. நடன அமைப் பில் மெய்ப்பாடுகள், உடல்மொழி, நடன அசைவுகளின் அழகியல் நேர்த்தியோடு, காட்சிப்படுத்தல்கள், நிகழ்த்திக்காட்டல்கள் முக்கியத்துவம் பெற்றிருந்தன. ஒவ்வொரு பாத்திரங்களும் பின்னணிகளையும் தனி த்துவ இயல்புகளையும் கொண்ட வலுவா னவை. எனவே அவற்றையும் அவற் றின் கதைகளையும் பார்வையாளர்களு க்குக் கடத்துவதற்கு காட்சிப்படுத்தல்கள் அவசியம். அதனைக் கவிதா சிறப்பாக வடிவமைத்து நெறிப்படுத்தியிருந்தார்.

அரங்கேற்ற நாயகிகளும் பாத்திரங்களின் தனித்துவங்களை உணர்ந்து மெய்ப்பாடு களையும் உடல்மொழியையும் வெளிப்ப டுத்தியிருந்தனர். ஆற்றுகைக்குரிய (Per formance) வெளி மிகப்பெரியதாக இருந்தது. அதனை இருவரும் தனித்துவ மாகவும் நுணுக்கமாகவும் வெளிப்படுத்தி? யிருந்தனர். ஒவ்வொரு பாத்திரங்களின் கதைகளும் நிகழ்த்தப்பட்டன. ஒவ்வொரு உருப்படியும் ஒவ்வொரு நடன நாடகம் எனச் சொல்லக்கூடியவை. அன்றைய அரங்கேற்றத்தில் பல நடன நாடகங்கள் நிகழ்த்தப்பட்டன என்று சொல்வதுகூட ஒருவகையிற் பொருத்தமானது. அரங்கே ற்றப்பேசுபொருளும், கதைகளும் ஆற்றுகை யும் அற்புதமான பார்வை அனுபவத் தினை வழங்கியிருந்தது.


### வடிவம் - கட்டமைப்பு - பேசுபொருள்


அலாரிப்பு - விருத்தம் என்ற உருப்படிகளுக்கு நடுவுநிலமை அதிகா ரத்திலிருந்து மூன்று திருக்குறள்கள் பயன்படுத்தப்பட்டன. அரங்கேற்றக் கருவு ருவுக்குக் கட்டியம் கூறுவதாக அவை அமைந்தன. முடிவில் தில்லானவில் கணியன் பூங்குன்னாரின் தத்துவார்த்த, மானிட சமத்துவ, இயங்கியல் குறித்த ஆழமான கவித்துவ வரிகளைக் கொண்ட 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' பாடல் பயன்படுத்தப்பட்டிருந்தமை உகந்த நிறை வுரைப் பாடலாகவும் அமைந்திருந்தது.

அரங்கேற்ற நிகழ்விற்கு ஆற்றல் மிக்க பக்கவாத்தியக் கலைஞர்கள் இசையால் உயிர்கொடுத்தனர். குரலிசை ஹரிகரன் சுயம்பு, மிருதங்கம் பிரசாந்த் பிரணவ நாதன், வயலின் அதிசயன் சுரேஸ், வீணை சௌமியா இராமச்சந்திரன்.

ஒரு கலை வடிவத்தின் கட்டமைப்புக் குள் நின்று - அதன் இலக்கணத்திற்கு நின்றபடியே - பல்வேறு புதிய பேசு பொருட்களை பேச முடியும் என்பதனை நிறுவுகின்ற அல்லது அதனைப் பழக்கப் படுத்துகின்ற ஒரு முனைப்பாகவும் கவி தாவின் கலை படைப்பாக்க முயற்சிகளை நாம் நோக்க முடியும். ஒரு கலை வடிவ த்தின் ஊடாகத் திரும்பத் திரும்ப ஒரே மாதிரியான பொருளையே பேச வேண்டும் என்ற அவசியம் இல்லை என்ற கட்டுடை ப்புச் சிந்தனையும் செயற்பாடும் இத்தகு கருப்பொருள் சார்ந்த பரத அரங்கேற்றப் படைப்பு உருவாக்கங்களில் வெளிப்படுகி ன்றன.









விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# காணாமல் ஆக்கப்படும் கறுத்தக்கொழும்பான்

காணப்படுவதால் உடற்சூடு குறையும். விற்றமின் யு சத்து அதிகம் காணப்படுவதால் கண்பார்வை கூர்மைபெறும். புற்றுநோயை எதிர்க்கும் ஆற்றலுடையது. உயர் இரத்த அழுத்தத்தை குறைக்கின்றது. இரத்தத்திலுள்ள சக்கரை அளவை கட்டுப்படுத்தும். இதயத்துக்கு பலமானது. மாதவிடாய் ஒழுங்குடன் செயற்பட உதவுகிறது. மூளையை சுறுசுறுபேபடைய வைக்கிறது.நோயெதிர்ப்பு சக்தியுடையது. நரம்புத்தளர்ச்சியை போக்குகின்றது. சிறுநீரககற்களை அகற்றுகிறது. உணவை சமிபாடடைய வைக்கிறது. மனச்சோர்வை நீக்கும்.

ஆண்மையை அதிகரிக்கும்.உடல் உறுதி அதிகரிக்கும்.இரத்த உற்பத்திக்கு உதவுகின்றன.சமிபாட்டு பிரச்சனைகளுக்கு தீர்வளிக்கும்.வாயுத் தொல்லையை நீக்கும்., உடலுக்குப் புத்துணச்சியை அளிக்கிறது. பித்தத்தைப் போக்கி குடலுக்குப் பலம் தருகிறது.நாள்பட்ட தலைவலியை சீர் செய்கிறது.ஞாபக சக்திக்கும் ஊட்டமாக அமைகிறது.கூந்தல் வளர்ச்சிக்கு உதவுகிறது முகப் பொழிவுக்கு உதவுகிறது.. ரத்தத்தில் உள்ள கொழுப்பையும் குறைக்கிறது. மாம்பழத்தை முகத்துக்கு பூசி கழுவும்போது புதிய அழகு ஒன்று பிறந்திருப்பதையும் அவதானிக்கலாம்.

ஆனாலும் மாம்பழத்தை உண்ண முடியாத வகைப்பாட்டுக்குள்ளும் சிலர் இருக்கலாம். அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு என்பதற்கிணங்க அளவு கணக்கற்று உண்பதால் வயிற்றோட்டம் உருவாகிவிடும். நீரிழிவு நோயாளர்கள் வைத்திய ஆலோசனை பெற்று உண்ண வேண்டும். முக்கனிகளில் அதிகம் பாடல் பெற்ற பழம் மாம்பழமாகவே இருக்கும். அதிலும் கறுத்தக்கொழும்பான் விலை இன்று கதிகலங்க வைக்கின்றது. அதுமட்டுமன்றி கறுத்தக்கொழும்பானின் ருசி இப்போது இல்லை. மருந்தடிக்கப்பட்ட பழங்களை விலைகொடுத்து வாங்கி உண்ணும்போது மருந்துக்கலவைகள் வாந்தியை குமட்டலை செரிமானக்குறைவை ஒவ்வாமையை ஏற்படுத்துகின்றது. கொழுத்தல் என்றால் பருமன், தசைப்பிடிப்பான,நிறையக்கிடைத்தல் எனப் பொருள் கொள்ளப்படும். நண்டு கொழுத்தால் வளையில் தங்காது என்பர். நண்டிற்கு நிறைவாக உணவு கிடைத்தால் அது ஓரிடத்தில் இருக்காது. ஓடித்திரியும் என்பது அதன்பொருள். அதேபோலவே கரும்பச்சை நிறத்தில் கறுத்துக்கொழுப்பதால் கறுத்துக்கொழுத்த மாம்பழம் காலப்போக்கில் காரணப்பெயராகி கறுத்தக்கொழும்பான் என்ற சிறப்புடன் உலாவத்தொடங்கிவிட்டது.

கொழுத்தலைக்குறிக்க பயன்படுத்திய இந்தச்சொல் கொழும்பு மாவட்டத்தை குறிக்க பயன்படுவதாக கொள்ளக் கூடாது. இப்படி ஒரு மயக்கம் இருந்தால் தெளிவு கொள்ள வேண்டும். கறுத்தக்கொழும்பான் ஒரு நிறையுணவுக்கு நிகரான தசைப்பிடிப்பான முக்கனி.மத்தியகோட்டுக்கு அருகிலே அமைந்துள்ள வெப்பவலய நாடுகளிலே பரவலாக இந்த மரம் காணப்பட்டபோதும் யாழ்ப்பாணச் சுண்ணக்கல்லின் நன்னீரில் விளையும் கறுத்தக்கொழும்பான் உலகிலேயே விசேட பேசுபொருளாகும். உலகெங்கும் பரந்து வாழும் யாழ்ப்பாணத்தவர்களின் விடுமுறைக்காலத்தேடலாக அமைவதும் இந்த கறுத்தக்கொழும்பானே. ஒரு சமுதாயத்தின் வரலாற்று இருப்பை நிலை நிறுத்துபவை நிலம் நீர் மண்வளம் சிறப்பான மரஞ்செடி கொடிகளே. அந்தவகையில் நன்கு திட்டமிட்ட வகையில் எமது யாழ்மாவட்டத்தை பிரதிபலிக்கும் கறுத்தக்கொழும்பானும் அதன் இயல்பையும் இருப்பையும் இழந்து போகும் வகையில் செயற்பாடுகள் துரிதமடைந்துள்ளன. முக்கனிகளில் ஒன்றான மாம்பழம் அம்பலவி செம்பாட்டான் கிளிச்சொண்டன் விளாட்டு மல்கோவா புளிமாங்காய் என பலவகையுடையதாக இருந்தாலும் யாழ்ப்பாணத்து கறுத்தக்கொழும்பானுக்கே சிறப்பு அதிகம்.




அந்தச்சிறப்பை தக்கவைப்பதும் எதிர்காலச்சந்ததிக்கு பரிசளிப்பதும் மனச்சாட்சியுடைய ஒவ்வொருவர் மனங்களிலும் செயல்களிலுமே உள்ளது. நல்லதொரு குடும்பம் தனக்கென சிறப்புகளை கொண்டிருப்பதுபோல நல்லதொரு சமுதாயமும் தமக்கான சிறப்புகளை இழந்துவிடாது பாதுகாத்தல் அவசியமானதாகும்.

நன்றி தமிழர் பொருண்மியம்

# யேர்மனி தமிழ் வான் அவையின் 5 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்ச்சி





கௌசி என அழைக்கப்படும் திருமதி கௌரி சிவபாலனை அமைப்பாளராகக் கொண்டு விளங்கும் யேர்மனி தமிழ் வான் அவையின் 5ஆம் ஆண்டு நிறைவு நிகழ்ச்சி (28-7-24) மிகச்சிறப்பாக நடைபெற்றதைக் குறிப்பிட வேண்டும்.

தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும். என ஓங்கிக் குரல் கொடுத்த மகாகவி பாரதி கண்ட புதுமைப்பெண்ணாகச் செயற்பட்டுவருபவர் கௌரி சிவபாலன். எனில் அதில் மிகை ஏதுமில்லை.

தமிழ் வான் அவையை நிறுவி கடந்த 5 வருடங்களாக தமிழாய்வு தமிழிலக்கிய ரசனை விடயங்கள் மூத்தோர் இளையோர் மாணவர் என அனைத்து வயதினரையும் உள்ளடக்கி கலை இலக்கிய நிகழ்வுகள் அரிய சேவை புரிந்த எழுத்தாளர்கள் அறிஞர்களைப் பாராட்டிக் கௌரவித்தல் நேர்முகம் என்பவற்றை உலக கலை இலக்கிய விற்பன்னர்களின் ஆதரவுடன் மெய்நிகர் நிகழ்வுகளாக நடத்தி சிறப்புப்பெற்றவர்கௌரி அவர்கள்

அந்த வகையில் வான் அவையின் 5ஆம் ஆண்டு நிறைவு நிகழ்ச்சியையும் உலக கலை இலக்கிய வாதிகளின் ஆதரவு மற்றும் ஒத்துழைப்போடு ஆடல் பாடல் வாழ்த்துரைகள் என சிறப்பாக நடத்தியமை குறிப்பிடத்தக்கது அத்துடன் சிறப்பு அங்கமாக அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் மிகப் பிரபலம் பெற்ற எழுத்தாளரும் உலகத்தமிழ் கலை இலக்கிய வாதிகளின் அருமை நண்பருமாலெட்சுமணன் முருகபூபதி யைக் கௌரவித்துப் பாராட்டிய மை மிகச் சிறப்பான அம்சமா கும்.



அன்னலஷ்மி ராஜதுரை (இலங்கை)

தமிழ் வான் அவை மூலமாக கௌரி சிவபாலன் இன் கலை இலக்கியப் பணி மேலும் சிறக்க வாழ்த்துவோம்.




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.







# அன்றங்கே ஒரு நாடிருந்தது

அது ஒரு சிட்டுக்குருவிக்காலம். வழமை மாதிரி எல்லாரும் கூடிக் கொண்டு கிளாஸ்“க்குப் போகும் போது, வழமை மாதிரி அன்றும் எல்லாம் இயல்பாத் தான் இருந்தது.

ரோட்டை அடைச்சுக் கொண்டு சைக்கிள் ஓடினது, வழியில வந்த வாகனங்களிடம் திட்டு வாங்கிக் கொண்டும் அது யாரையோ திட்டினமா திரி திருத்திக் கொள்ளாமல் ரோட்டைக் குத்தகைக்கு எடுத்தது, வகுப்பில் வாத்தியாரின் முகத்துக்கு முன்னால் படித்து, முதுகுக்கு பின்னால் முசுப்பாத்தி பண்ணினது, பிறகு கிண்டலும் குத் தலுமா வாங்கிக் கட்டிக்கொண்டு வலி க்கவே இல்லாத மாதிரி சிரித்து நடித்து அவரை வெறுப்பேற்றியது, வகுப்புத்தொடங்கி அரைவாசியில் ஹெலி வழிகாட்ட பொம்பர் வட்டமடிச்சது, மாஸ்ரர் உடனே குஞ்சு பொரிச்ச கோழி இறக்கைக்குள்ள அணைக்கிற போல எல்லாரையும் கொண்டு போய் தன்ர வீட்டுப் பெரிய பங்கருக்குள் இறக்கியது. எங்களுக்கு அவசர அவசரமா அம்மாமாரின் பதட்டம் நினைவு வந்தது. எல்லாமும் வழமை போலத்தான் நடந்தது.

மழைபெய்திருந்ததால் பங்கருக்குள் தண்ணி நிண்டது. நாங்கள் அவ்வளவு பேரும் தொம் தொம் எண்டு குதிச்சு தாறுமாறா அதுக்குள்ள ஓடித்திரிய தண்ணி சேறாகிக் கலங்கி நல்ல தடிச்ச பால்க்கோப்பி நிறத் துக்கு வந்திட்டுது. பொம்பர் வழமை மாதிரி கைலாசபிள்ளையார் கோவிலடியையே குறிவைச்சு சுத்திச் சுத்தி குண்டு போட்டதால ஒவ்வொரு குண்டும் தலையில விழுற மாதிரி இருந்தது. ஒவ்வொரு அதிர்வுக்கும் ஜீவி கைகளால் தலையை மூடிக் கொண்டாள்.

“இண்டைக்கு இதுக்குள்ள குண்டு விழுந்து நாங்க கூண்டோட கைலாயம் போகாட்டி அடுத்த தரம் வரேக்க குடை கொண்டு வாடீ“ என்று சொன்ன நேரம், ஓம் எண்டு அவள் ஒப்புக்கொண்ட நேரம்.“ஏய் லூசு குண்டு தலையில விழாமல் குடை பிடிக்கச் சொல்றாள் டீ“என அவன் திட்டின நேரம். அப்பவும் அதே அசமந்தமாய் வழமை போல அப்பாவியாய் முகத்தை வைச்சுக் கொண்டு அவள் ஓ......... எண்டு இழுத்த நேரம் எங்களுக்கு இரண்டடி தூரத்தில சேத்துத் தண்ணிக்குள்ள. அவர் மெதுவா நெளிஞ்சார். பிரம்மையோ என்று உத்துப் பார்க்க சேத்தையும் மீறி இடைக்கிடை வழவழப்பாக அவரிட தோல் அடையாளம் தெரிஞ்சது.

அவர் நிக்கிறதை நாங்கள் கண்டதை அவர் அறியக்கூடாது எண்டமாதிரி ஆளாளுக்கு இரகசியமா அவர் நிக்கிறதை சொல்லிக் கொண்டோம். பிறகு நாங்கள் வந்து குதி க்கும் போதே இங்குதான் இருந்தாரா என கேள்வி கேட்டு இருந்துதானிருப்பார் எண்டு பதிலும் சொல்லிக்கொண்டம். பிறகு அவரை உழக்கியிருப்பமோ எண்ட சந்தேகமும் வந்தது. உழக்கியிருந்தால் கடிச்சிருப்பார் என்று அவள் சொன்னப்பிறகு ஓடேக்க குதி க்கேக்க அவதியில ஈக்கு குத்தினது கல்லு நெருடினது ,, தடி கீறினது, காலில கால் மிதிபட்டது எல்லாம் எல்லாருக்கும் பாம்பு கொத்தி நோகிற மாதிரி இருந்தது. அவருக்கு பெரிய இடம் விட்டு மூலையில நெருக்கிக் கொண்டு நிண்டும் சேத்தை வழிச்சு வழிச்சு காலில கடிச்ச அடையாளம் இருக்கோ எண்டு பார்த்துக் கொண்டம். பாம்பு கடிச்சா என்னென்ன மாற்ற அறிகுறிகளை உடம்பு வெளிக்காட்டும் என்று பாம்புக்குத் கேக்காத தொனியில் ஆராஞ்சம். அப்பத்தான் “எனக்கு தொண்டையை வரட்டுற மாதிரி இருக்கு“ எண்டு பிரியா சொன்னாள். பிறகு ஒவ்வொருவரும் ஒவ்வொரு அறிகுறி உணர்வதாக சொல்லிக்கொண்டம். எப்படியாவது பதுங்கு குழியிலிருந்து உட னேயே வெளியேற வேண்டும் என்று பாம்புக்கு கேக்காமல் இரகசியம் கதைச்சு தீர்மான மானோம். பொம்பரும் ஹெலியும் சுத்தி றதை சுத்தமா மறந்து போனம். வெளியே றத் தொடங்கும் நேரம் தலையில் விழுந்தது போல அதிர்வோட பக்கத்தில் எங்கோ குண்டுவிழ ஏறத்தொடக்கின எல்லாரும் சறுக்கிக் கொண்டு சேத்தில விழுந்தம். “பாம்போட என்னால இருக்கேலாது“ எண்டு வழக்கம் போல சபைகுழப்பி ஆரம்பிச்சாள்.



மாலினி மாலா
(யேர்மனி)

“யார்டி இப்ப உனக்குப் பாம்பை கட்டி வைச்சது “ என்று ஒருவனும் ,“இருக்கேலாட்டி டிவோஸ் பண்ணடி“ என்று ஒருத்தியும் பாம் புக்கும் பொம்பருக்கும் கேட்கக் கூடாது எண்டமாதிரி குசுகுசுவெண்டு சீண்ட,“இந்த எருமையளோட இருக்க மாட்டன்“ எண்டு அவள் கிசுகிசுப்பா கோபப்பட,வெளி யேறுவது என்று ஒரு பகுதியும், உள்ளே இருப்பதென்று ஒரு பகுதியுமாக அவசரமா இரண்டு கட்சி வகுத்துக் கொண்டோம். வெளியேறினால் பாம்பு கொத்தாமல் தப்பலாம் எண்டது ஒரு கட்சித் தீர்மானம். இவ்வளவு பேரும் ஒண்டா வெளியால வந்ததை கண்டால் பொம்பர் அடிச்சு கூண்டோட கைலா சம் எண்டது மறு கட்சித் தீர்மானம்.ஒருமாதிரி ரெண்டு பகுதியும் மோதிக்கொண்டிருந்த போது அவள் பேச்சுவார்த்த இடைத்தரகராகி

“பொம்பர் போகும் வரைக்கும் இதுக்குள்ள இருக்கிறது தான் நல்லது பாம்பு கொத்திற தானாலும் ஒருத்தர் ரெண்டு பேருக்குத்தான் கொத்தும்“ எண்டு சொல்ல “யாருக்கு?““ பொறு கேட்டுச் சொல்லுறன்“

“அதேன் ஒருத்தர் ரெண்டு பேருக்கு மட்டும் கொத்தும்?““பாம்பென்ன நுள்ளுப்பிராண்டி கிள்ளுப்பிராண்டியே விளையாடுது எல்லாருக்கும் வஞ்சகமில்லாமல் கொத்த?“ என்பது போன்ற பலவித காரசாரமான விவாதங்களு க்கு நடுவில் அவன் தனியாக பாம்போடு பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்தான். “இஞ்ச பாரும் ஐசே. இந்த பங்கரை விட்டு வெளியால போனால் தமிழன் எண்ட படியால் எக்கட தலையில தான் பொம்பர் காரன் குண்டு போடுவான் உம க்கும். அவனுக்கும் ஒரு பிரச்சனையும் இல்லை. அதால உமக்குப் போடமாட்டான். அதால இப்ப நீர் வெளியால போம். நாங்க இங்க பதுங்கியிருக்கிறம். அவன் போன உடன நாங்க வெளியால போறம் நீர் வந்து பதுங்கியிருந்து ஆரையாவது பதம் பாரும்.

28 ஆம் பக்கம் பார்க்க...







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# நம்ம ஊர்க் கறையான்

மாதவி (யேர்மனி)

கறையான் என்றதும் அம்மா வேலியில் கறையன் பிடித்துக்கிடக்கு என்று தடியால் தட்டுவதுதான் ஞாபகமாக இருக்கு. ஓலை எல்லாம் திண்டு காலி செய்வதை தடுக்க காலங் காலத்தாலை வேலியைத் தடியால் தட்டி கறையான் கூட்டைக் கலைப்பா.

அடுத்து மனித நடமாற்றம் குறைந்த பகுதிகளில் கறையான் புற்றுக்களை கட்டி இருக்கும். அந்தப்புற்றில் ஒரு லட்சம் கறையான்களுக்கு மேல் குடி இருக்கும். இந்தப் புற்றில் கருநாகமும் குடி இருக்கும். கறையான் புற்றெடுக்க கருநாகம் குடிபுகுந்தது. இது நாம் கட்டிய வீடுகளில் இன்று யாரோ குடி புகுந்து இருப்பதை நினைவு படுத்துகிறது. கட்டிடக்கலையை கறையானுக்கு கற்றுக் கொடுத்த பல்கலைகழகம் எது.

## புற்றின் காற்றோட்டம்

புற்றின் நடுவில், ஒரு உள்ளீடற்ற குழாய் புற்றின் உச்சி வரை நீண்டிருக்கும். புற்றின் மண்சுவரில், மேற் பரப்பி லிருந்து 2 செ.மீ.க்குள், நம் உடலின் இரத்த நாளங்களைப் போன்று, எண்ணற்ற அடிப்பரப்புக் குழாய்கள் இருக்கும். இவை இரண்டையும் இணைக்கும் பக்கவாட்டு இணைப்புக்குழாய் இருக்கும்.

திறந்த நிலையிலிருக்கும் புற்றில், அடிப் பரப்புக் குழாய்கள், ஏற்கனவே புற்றிலிருக்கும் திறந்தத் துளை களில் முடியும். மூடிய நிலையிலிருக்கும் புற்றில், அடிப் பரப்புக் குழாய்கள், நுண்துளைகளில் முடியும். புற்றின் உள்காற்றிலிருக்கும் ஆக்சிசன், கரியமில வாயு, வெப்பம், நீராவி ஆகியன, அடிப்பரப்புக் குழாய் வழியாக, புற்றின் வெளிக்காற்றுடன், வேதியியல் பரிமாற்றம் செய்துகொள்ளும். எனவே புத்தம் புதிய காற்று, மீண்டும் புற்றுக்குள், உள்ளீடற்ற குழாய் மற்றும் அடிப்பரப்புக் குழாய்கள் வழியாக உள்ளிழுக்கப்படும். இங்ஙனம் வெளிக்காற்று, புற்றினுள் சென்று, புற்றின் உட்புறத்திற்குச் சென்றடைந்து, புற்றின் உட்புற வெப்பத்தைத் தணித்து குளுமையாக மாற்றும்.

அதே சமயத்தில், பாம்பு போன்ற பிற உயிரிகளுக்கு அழைப்பிதழாகவும் அமைந்து, கறையான்களுக்கு வாழ்விட இன்னல்களை ஏற்படுத்துகிறது. இந்தக் கறையான் இன்று நேற்று வந்த இனம் அல்ல. கறையான்கள் ஏறத்தாழ 20 கோடி ஆண்டுகளுக்கு முன்னரும், இப்பூமியில் வாழ்ந்து வந்தன. இதற்கான ஆதாரங்களை, அதற்குரிய தொல்லுயிர் எச்சம் உறுதி செய்கின்றன. கறையான்களில் பத்து சதவிகிதமே, நமக்கு பொருளாதார சீர்கேட்டை உருவாக்கும். மற்றவை, தேவையில்லாதவைகளை உண்டே வாழ்கின்றன. அந்தப் பத்துவீதம் படுத்தும் பாடே பெரும்பாடு எனச் சொல்லத்தோன்றும். பொதுவாக இலங்கையில் மரப் பயன்பாடு அதிகம். கறையான் மரத்தை இலகுவில் அரித்து அழிக்கும். கிடுகு வேலி,மரத்தூண்கள், மரவீடுகள், யாவும் இந்தக்கறையானுக்கு பலியாவன. இவை மட்டுமல்ல....

மாவீரன் நெப்போலியனின் போர்க்கப்பல்களுள் ஒன்று, கறையான்களால் அரிக்கப்பட்டு வீணானது என்பது வரலாறு. இந்தக்கறையான் எந்த அசுமாத்தமும் இன்றி மண்ணுக்கடியால் சென்று மரக் கட்டிடங் களைக் காலிசெய்வதும் உண்டு.

அவுஸ்திரேலியாவில் பிரமாண்டமான மரக்கட்டிடம் ஒன்றின் அடிப்பாகம் இக்கறையானால் காலிசெய்யப்பட்டு, கட்டிடமே கவிழ்ந்தபின்தான் காலி செய்த விபரம் தெரியவந்தது. இதன் தொல்லை தாங்க முடியாமல் தாயகத்தில் வேலிகள் எல்லாம் தகரவேலியாகவும், மதில்களாகவும் உருப்பெற்றன. இதனால் வேலியில் நின்ற பூவரசமரம், கிழுவங்கதியால் யாவும் காணாமல் போயின.

அண்மையில் தாயகம் சென்றபோது ஒரு நண்பர் பெருமையாக வீட்டைச் சுற்றிக் காட்டினார். முற்றத்துக்கு சாணம் தெளிக்கத்



தேவை இல்லை என்று, கால்பதியும், இடம் எல்லாம் கல்லுப்பதிச்சிருக்கிறேன். கறையான் தொல்லை என்று மதில் கட்டி இருக்கிறேன். மசுக்குட்டி வருது என்று முருங்கை மரத்தை தறிச்சுப்போட்டேன். வாழைமரம் பப்பாசி இவை வளர்ப்பதைவிட வாசலில் கொண்டுவந்து தருவார்கள்.


இதனால் அந்த தோடம் இருந்த இடத்தில் தான், இந்த வீடுபோதாது என்று பெருப்பித்திருக்கின்றேன்.

நானும் மனிசியும்தான். பிள்ளைகள் எல்லாம் வெளியில் என்றார்.

இதனால் ஒரு வீட்டுக்கு குளிர்சியைக் கொடுக்க ஏசியை நாடவேண்டிதாச்சு. கறையான் இன்று மனிதவாழ்வை அங்கு மாற்றி வைத்துள்ளது. வேலியில் உள்ள கிடுகை மட்டுமல்ல தென்னை மரத்தையே அரிக்கப்புறப்பட்டிருக்கும் கறையானை இங்கு காணலாம்.

படம்: வெற்றிமணி





டொட்முண்ட் மாநகரில்....
தமிழர் அரங்கம்
சனிக்கிழமை 15.00- 18.00
திரையிசை நடனம்
(Cinimatic Dance)
கீபோர்ட் (Keyboard)
வெள்ளிக்கிழமை 18:00-19:00
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது.சிறுவர்களில் இருந்து பெரியோர்கள் வரை இணைந்து கொள்ளலாபம்
Für Kinder und Jungendliche und Erwachsene!
6€ Pro Stunde
வெள்ளிக்கிழமைகளில்
Jeden Freitag
தமிழர் அரங்கம்
Rheinische Srt.76-80
44137 Dortmund
Info:0151 633 633 33
0178 146 006 3
தமிழ் மொழி (Tamillsche Sprachunterricht)
வெள்ளிக்கிழமை 16:00-17:45
Free
அ ஆ இ ஈ உ
சிறார்களுக்கும்,இளையோர்களுக்கும், எளிமையான முறையில் தமிழ் கற்பிக்கப்படும்.
Für Kinder und Jungendliche!Auch speziell jugendliche, die sich mit der tamilische Sprache nicht auskennen
யேர்மன் மொழி (Deutsch für Anfänger / Innen)
ICH LERNE DEUTSCH
6€ Pro Stunde
வெள்ளிக்கிழமை 17.45 -19.15
யேர்மன் மொழியில் பேசவும் எழுதவும் கற்பிக்கப்படும்
யேர்மன் குடியுரிமை பெறுவதற்கு பயன் உள்ளதாக அமையும்
விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# மெய்ப்பொருள் காண்பது அ(ரிது)றிவு

**அந்த நாட்களில பட்டறிவை பகுத்தறிய பேப்பரும் அதைப் பகுத்துப் பாக்கிற ஆக்களும் இருந்திச்சினம்.**

“தம்பி ஊரில என்ன நடக்குது ஒவ்வொரு நாளும் வெட்டுக்குத்து, ஆவா குறூப்பின் அடாவடி எண்டு ஊர்ப்புதினத் தலையங்கத்தில அடிக்கடி வருது, கோயில் திருவிழாவுக்கு வேற வரோணும் இப்ப எப்பிடி நிலமை அங்க“ எண்டு தொடங்கின கனடாக் கோல் இடையிலயே உரவ ஆகீட்டுது. காலமை கோல் கதைச்சு முடியாமல்ல வேலைக்கு வெளிக்கிட வீட்டில மாமி வேற,“இப்ப பேப்பரைப் பாக்கவே ஏலாது முன் பக்கம் வெட்டும் கொத்தும், சண்டை எண்டுதான் இருக்கு“ எண்டு புறுபுறுத்தபடி தேத்தண்ணிக் கோப்பையை கழுவப் போனா.

இதை நம்பி வாட்டுக்குள்ள போய் வந்த news ன்டை எடுப்புக்கு ஏத்த மாதிரி நாலு “பீமன்கள்“ இருப்பாங்கள், கை கால் எண்டு வெட்டுப்பட்டு தொங்கிக் கொண்டு இருக்கும்,எப்பிடிப் பொருத்தப்போறம் எண்டு பாத்தா, வாளைத் தூக்கினது எண்டு சொல்லி ரெண்டு நோஞ்சான், வெட்டு வாங்கினது எண்டு காயங்களோட மூண்டு அதை விட சொத்தல். அப்பதான் விளங்கிச்சுது பேப்பரில தலைப்பில வந்த அளவுக்கு weight ஆக்களுக்கும் இல்லை news க்கும் இல்லை எண்டு.

எண்பதுகளில பேப்பரை வாங்கி வாசிக்க கொஞ்சம் நேரம் எடுக்கும் ஆனாலும் வாச்சு முடிய உலகத்தையே சுத்தி வந்த மாதிரி இருக்கும். என்ன தான் ஆராவது ஒரு கதையை முழுக்கச் சொல்லி இருந்தாலும் முழுப் பேப்பரா இருந்தாலும் இல்லாட்டி special edition ஒரு பக்கப் பேப்பரா இருந்தாலும் அதை வாங்கி வாசிச்சாத்தான் ஒரு தெளிவு இருக்கும். இலங்கை முழுக்க ஆறு தமிழ்ப்பேப்பர் வரேக்க, யாழ்ப்பாணத்தில மட்டும் 3 பேப்பர் வாறது. ஈழநாடு, முரசொலி அதோட கனகாலமா தனித்து உதயன் வந்தது. வீரகேசரியும், தினபதி, தினகரனும் கொழும்புப் பேப்பர். வார வெளியீடா ஞாயிற்றுக்கிழமை வாற பேப்பரை முதலே book பண்ணி வாங்காட்டி காலமை போகக் கிடைக்காது. அதிலேம் சிந்தாமணி எண்டு வாற தினமதியின்ட ஞாயிறுப் பேப்பருக்கு demand கூட.

அதோட எண்பதுகளில Hot Spring , Saturday review எண்டு English paperகளும் ஊரில இருந்து வாறது.



English paper வாங்க வெண்டு ஒரு தனிக் கூட்டம் இருந்தது. வீட்டை வாங்கிற இங்கிலிஸ் பேப்பரை வாசி எண்டு வற்புறுத்த அதுகும் daily news எண்டா lifco dictionary யோட தான் போக வேணும் வாசிக்க.



Dr.T. கோபிசங்கர்
(யாழ்ப்பாணம் அரச வைத்தியசாலை)
இலங்கை

Dailynews காரன் “லங்கா புவத்“ ஆ மாறினாப் பிறகு Sunday times ஐ சனம் கூட வாசிக்கத் தொடங்கிச்சுது. இக்பால் அத்தாசும் ககைவா column உம் ஆங்கிலத்தோட அரசியல் அறிவையும் தந்திச்சுது.

வெள்ளைகாரன் மாதிரி நாங்களும் பேப்பரோட தான் toilet க்குப் போறனாங்கள், என்ன அவங்கள் கொண்டு போறது துடைக்கிறதுக்கு நாங்கள் வாசிக்கிறதுக்கு. யாழ்ப்பாணத்தானுக்கு காலமை கட்டாயம் ஒரு கையில பேப்பரும் மற்றக்கையில பால்க்கோப்பியோ தேத்தண்ணியோ இருக்கோணும். இப்ப what‘s app ஐப் பாக்க phone ஓட போற மாதிரி கக்கூசுக்கு கையில பேப்பர், கோப்பி, சுருட்டு எண்டு ஒவ்வொருத்தரும் ஏதோ ஒண்டையோ ரெண்டையோ கொண்டு போவினம்.

அப்ப பேப்பர் மட்டுமே விக்கிற கடை இருந்தது. சில கடைக்காரர் காலமை வந்து பேப்பரை வித்திட்டுப் போய் திருப்பி வந்து ஒம்பது மணி போல கடைதுறந்து மிச்ச வியாபாரத்தைச் செய்வினம். பால், பாண் எல்லாம் வீடு தேடி வந்து வியாபாரம் செய்தாலும் பேப்பரை வீடுவீடா விக்கறதோ இல்லாட்டிப் பேப்பரை வீட்டில போய் போடிற ஆக்களோ இருக்கேல்லை. கடைக்குப் போய் வாங்கின பேப்பரை கடை வாசலிலயே வைச்சு விரிச்ச மேலால மேஞ்சிட்டுத்தான் வீட்டை பேப்பரைக் கொண்டு வாறது.

காலமை வாங்கிற பேப்பரை முதல்ல ஆர் வாசிக்கிறது எண்டதிலேயே சண்டை வரும். கடைசீல சமாதானமா உள்பக்கம் வெளிப்பக்கம் எண்டு பக்கமா பிரிச்சு ஆளுக்கு ஒண்டொண்டா வாசிக்கிறது. ஆம்பிளைகள் எல்லாம் காலமை வாசிச்சு முடிய அம்மாமார் எல்லாம் மத்தியானம் சமைச்சிட்டு படுத்திருந்து வாசிப்பினம். அதோட பின்னேரம் ரோட்டில நடக்கிற அரட்டை அரங்கத்தில அதைப்பத்தி கருத்துப் பரிமாற்றங்கள் நடக்கும். ஊரில ரெண்டு மூண்டு பேப்பர் வாற காலத்தில பக்கத்து வீட்டுக்காரர் வாங்கிற பேப்பரை நாங்கள் வாங்கிறதில்லை பேப்பரை வாங்கி பின்னேரம் மாத்தி வாசிக்கிறது.

இப்பத்த Breaking நெறளக்கு முன்னோடி எங்கடை ஊர் special edition தான். முதல் முதலா எப்ப இந்த special edition பேப்பர் வந்தது எண்டு தெரியேல்லை. திடீரண்டு வந்து பிளேன் நிவாரணம் போட இந்திய ராணுவம் வரப்போது எண்ட செய்திதான் முதல் வந்த special edition எண்டு நெக்கிறன். இது Print பண்ண முதலே வரப்போதாம் எண்டு சனம் எப்பிடியாவது கேள்விப்பட்டிடும். எனக்குத் தெரிஞ்சு அச்சகத்தில இருந்து வாற special பேப்பரை கடைக்குள்ள

23 ஆம் பக்கம் பார்க்க...

Nandy's Catering & Partyservice
NANDY'S CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும் குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம்.
இலங்கை, இந்திய, ஐரோப்பிய உணவுகளையும் தயாரித்து வழங்குகின்றோம்.
பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!
உணவு விநியோகம் பரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிட்டுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளோம்.
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை
தொடர்புகளுக்கு: 0173-7424955
0211-7691974
www.Nandys.de | email: info@nandys.de


நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்

# Jaffna Bazar Jewellery



தங்க நகைகள் என்றால் தங்கள் மனதில் நிலைத்து இருப்பவர்கள் நாங்கள் என்றும் நாடுகள்

2024ம் ஆண்டின் புதிய வரவு! புத்தம் புது அழகிய டிசைன்களில் தங்க நகைகள்



பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்

திருத்த வேலைகள் குறுகிய காலத்துள் செய்து தரப்படும்.

Branch:
Jaffna basar.
Taunus Str 31,
60329 Frankfurt Main

உங்கள் இலத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்



ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு

பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
அனைத்தும் எம்மிடம் தரமாக மலிவாகக்கிடைக்கும்

Jaffna Bazar

Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main

Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425



# எங்கிருந்தோ வந்தான்!

இப்படித் தான் எமக்கும் எங்கிருந்தோ ஒருவர் வருவர். தேவையானவற்றையெல்லாம் சலிக்காது செய்வர். எம்மீது பெரும் நம்பிக்கையும், அன்பும் வைத்திருப்பர். எந்நேரமானாலும் உதவிடத் தயங்கர். எம் செயல்கள் எதுவானாலும் மிக்க பொறுமையுடன் ஏற்றுக் கொள்வர்.

சக்கரமாய் சுழன்று கொண்டிருக்கும் வேக வாழ்வில், எப்போதாவது ஓய்ந்து கிடக்கும் போது, பண்பிலே தெய்வமாய் பார்வையிலே சேவகனாய் நிற்கும் அந்த எங்கிருந்தோ வந்த ஒருவரிடம் நாம் பெற்ற இன்பங்களை, நெஞ்சம் கொஞ்சம் மீட்டி பார்க்கும். கண்ணை இமை இரண்டும் காப்பது போல் நண்பனாய் மந்திரியாய் நல்லாசிரியனுமாய் இன்னும் பலவாய் நின்று, சிவனடியாரை சிவன் தடுத்தாட்கொண்டருளியது போல சீர்மிகு வாழ்விற்கு வழி தந்து, ஏற்றம் புரிய வந்தவரை எண்ணுகையில் கண்கள் ஈரமாகும்.

ஆஹா! இவரால் பெற்றுவரும்நன்மை எல்லாம் பேசி முடியாது, ஒன்றும் குறைவின்றி வண்ணமுறக் காக்கின்றாரே, என்ன நான் கைம்மாறு செய்வேன்? எதைக் கொடுத்தால் மகிழ்வர்? எப்பொருள் அவர் தந்த துணைக்கு ஈடாகும்? எது எம் நினைவினை உறுதி செய்து பல்லாண்டு பற்றி நிற்கும்? இதுவா? அதுவா? எனத் திகைத் திருக்கையில், காதல் பெரிதெனக்குக் காசு பெரிதில்லை என்பார். எங்கிருந்தோ வந்தார். இங்கிவரை யான் பெறவே என்ன தவம் செய்து விட்டேன்!

கட்டுறுதி உள்ள உடல்
கண்ணிலே நல்ல குணம்
ஒட்டுறவே நன்றாய் உரைத்திடும் சொல்
ஈங்கிவற்றால்
தக்கவனென்றுள்ளத்தே
சார்ந்த மகிழ்ச்சியுடன்
மிக்க உரை பல சொல்லி
விருது பல சாற்றுகிறாய்
கூலி என்ன கேட்கின்றாய்?
கூறு என்றேன் ஐயனே!
தாலி கட்டும் பெண்டாட்டி
சந்ததிகள் ஏதுமில்லை
நானோர் தனியாள் நரை
திரை தோன்றாவிடினும்
ஆன வயதிற்களவில்லை தேவரீர்
ஆதரித்தாற் போதும் அடியேனை
நெஞ்சிலுள்ள
காதல் பெரிதெனக்குக் காசு
பெரிதில்லை என்றான்.

பாரதியுடன் மிக அணுக்கமான குவளைக் கண்ணனை மனதில் வைத்து கண்ணன் என் சேவகன் பாடலைப் பாடியதாகச் சொல்வர். குவளைக் கண்ணனுக்கும் பராதிக்குமான உறவு மிகவும் நுட்பமானது. பாரதியின் புதுச்சேரி வாழ்க்கைக்கு நிழலானவர். ஆனால் பாரதியின் நிழலே தன் சுவர்க்கபுரி என வாழ்ந்தவர். பாரதி கவிதைகளை மனனம் செய்வதும், பாரதி புகழ் பரப்புவதுமே அவர் தொழிலெனக் கொண்டவர்.

அனைத்துக்கும் மேலாய், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் யானையின் காலடிக்குள் சிக்கிக் கொண்ட பாரதியை தன் உயிரையே பொருட்படுத்தாது மீட்டெடுத்த மெய்யன்பர். எந்தையும் தாயும் நூலில் பாரதியின் மூத்த மகள் தங்கம்மா பாரதி, குவளைக் கண்ணனுக்கும்,பாரதிக்கும் இடையே நடந்த சில சம்பவங்களைக் குறிப்பிட்டுள்ளதில் இருந்து, பாரதியைத் தெய்வமாகத் தரிசித்தவர் குவளைக் கண்ணன் என்பதும், குவளைக் கண்ணன் மீது பேரன்பும், அக்கறையும் கொண்டவர் பாரதி என்றும் தெரிய வருகிறது.



கலாசூரி
தீவ்யா சுஜேன்
(இலங்கை)

பிறர் நலத்தில் கவனம் கொள்ளும் அதி உன்னத பண்பினைக் காட்டி நிற்கும் இவர்கள் நட்பு எக்காலத்துக்கும் உகந்த பாடம். நம் வாழ்வில் நடைபெறும் ஒவ்வொரு காரியங்களுக்கும் காரணம் உண்டு. சிலர் அறிவார். சிலர் அறியார்.அறிந்தோர் அமரசுகம் எய்துவர். இன்பத்தை எண்ணுபவர்க்கே என்றும் இன்பம் மிகத் தருவதில் இன்பமுடையது இப்படைப்பு.

கண்ணன் எனதகத்தே
கால் வைத்த நாள் முதலாய்
எண்ணம் விசாரம்
எதுவுமவன் பொறுப்பாய்
செல்வம் இளமாண்பு
சீர்ச சிறப்பு நற்கீர்த்தி
கல்வி அறிவு கவிதை சிவயோகம்
தெளிவே வடிவாம் சிவஞானம்
என்றும்
ஒளிசேர் நலமனைத்தும் ஓங்கி
வருகின்றன காண்!
கண்ணனை நான்
ஆட்கொண்டேன்! கண்கொண்டேன்!
கண்கொண்டேன்!
கண்ணனை யாம் கொள்ளக்
காரணமும் உள்ளனவே!

இப்படைப்பு எல்லையற்ற கருணை உடையது. இப்பிரபஞ்சத்தில் தோன்றிய அனைத்து உயிர்களுக்கும் நன்மை உண்டாகவே விரும்புகிறது. இங்கு தனித்தோர், தாழ்ந்தோர் என்று எவரும் இல்லை. எல்லோர்க்கும் ஒருவர் இவ்வண்ணமாகத் தான் எங்கிருந்தோ வருவர். அனைத்தும் தருவர். கண்முன் நிற்கும் கடவுள் அவர் அன்றிப் பிறிதெவரோ? இதை உணராதார் உய்வரோ?

## திரைப்பட இயக்குனர், பாடலாசிரியர், நடிகை நவயுகா குகராஜாவுக்கு ஏ.வி.எம்.பிறந்தநாளில் கிடைத்த விருது







இலங்கை தமிழ் நாடக உலகின் முதல் நாடக சஞ்சிகை யை உருவாக்கி, பலரை நாடகக் கலைஞராய் மெருகேற்றி அழகு பார்த்த ஐயா ஏ.ஆ. குகராஜா அவர்களின் மகளும், ஆசிரியர், பாடல் ஆசிரியர் சிறந்த தமிழ் எழுத்தாளர், திரை கலைஞர் மற்றும் திரைப் பட இயக்குனராக தன்னை நிரூபித்து வெற்றிவாகை சூடி வரும் எங்கள் ஈழத்து இளவரசி அன்பிற்கினிய நவயுகா குகராஜா அவர்களுக்கு பெருமைமிகு ஐயா ஏவி.எம் பிறந்த நாளில் ஏவி.எம் திரை பல்கலைக்கழகத்தில், எங்கள் பாசமிகு தரமான திரை படைப்பின் நாயகன் யாத்திசை தரணி ராசேந்திரன் கரங்களால் விருது வழங்கி சிறப்பு செய்து மகிழ்ந்தோம்.

**அன்புடன் ஆரா. முத்தமிழ் கலை சங்கமம் புதுச்சேரி**






ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு

பசுமையான மரக்கறி வகைகள் கடல் உணவு வகைகள் அனைத்தும் எம்மிடம் தரமாக மலிவாகக்கிடைக்கும்

உங்கள் இலத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்

Jaffna Bazar

Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main

Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# Jaffna Super markt

Jaffna SUPER.MARKT

5th ANNIVERSARY CELEBRATIONS
ANNIVERSARY
MÜNSTER

**Lebensmittel aus Asien, Afrika,China und Orient**

எமது நிறுவனத்தின்
5 ஆவது ஆண்டு நிறைவை
முன்னிட்டு மூன்று வாரங்கள்

**சிறப்பு மலிவு விற்பனை!**

**02.09.2024 முதல் 21.09.2024 வரை**




**Tel: 0179 2310 560**

Wolbecker Str.16a – 48155 Münster
(Eingang von Bremer Platz neben Parkhaus Ausgänge)

MÜNSTER

**Die Beste Pizzeria Münsters – Tradition trifft Geschmack**




Wolbecker Str.16a – 48155 Münster



# புரட்டிப்போட்ட புரட்டாதிச்சனி

தண்டவாளத்தில் தலைவைத்து ரெயின் காங்கேசன்துறையில் இருந்து புறப்பட்டு விட்டதோ என்று நிமிடக் கணக்கில் கணித்து சொல்வேன்.

அந்தக் காலத்தை கி.பி.,கி.மு போல் இப்படி அதனை இரண்டாக வகுக்கலாம்.

இது கலைஞர் கருணாநிதி தண்டவளத்தில் தலைவைத்ததற்கு பின்னர், மூன்றாம் பிறை படத்தில், சிறிதேவி தண்டவாளத்தில் தலைவைத்த கமலோடு, தலைவைத்து விளையாடுவதற்கு முன்னர்.

பயணம் போன நாட்களை விட, ரெயிலில் இடம் பிடிக்கவும், சோடப்போத்தல் மூடி நசிக்கவும் தான் அதிகமாக தெல்லிப்பழை ரெயில்வே ஸ்ரேசன் போயிருப்பேன். அதென்ன சோடப்போத்தல் மூடியும், தண்டவாளமும் என நீங்கள் நினைத்தால், நீங்கள் 70களுக்கு பின் பிறந்தவர்களாக இருப்பீர்கள்.

அது ஒர் திறில் நிறைந்த இன்ப விளையாட்டு (வீட்டில் தெரியாத வரைக்கும்.)சோடப் போத்தல் மூடி ஒன்றை எடுத்து, ரெயின்

மாதவி 02 (யேர்மனி)

வருவதிற்கு ஒரு 10 நிமிடங்களுக்கு முன் தண்டவாளத்தில் குப்புறவைக்வேண்டும். பின் ரெயின் வரைக்க சற்று தள்ளிநின்று கண்ணும் கருத்தம்மா சோடபோத்தல் மூடியை பார்த்தவண்ணமே இருக்க வேண்டும்.

ரெயின் வந்ததும், ஆயிரம்கால் பூச்சி போல அத்தனை சில்லும் மூடியை நசித்துகொண்டு போக, மூடி சப்பையாகி வட்டமாக வந்திடும். தண்டவாளத்தை விட்டு சிலநேரம் பக்கத்திலும் பறந்திடும். ஓடிப்போய் கல்லால் தட்டி மெதுவாக எடுக்கவேண்டும். அவ்வளவு சூடு சுடும். பார்த்தால் மூடி முழுநிலவு போல தங்கமாய் ஜொலிக்கும்.

பத்துச் சதமும் வைக்கலாம், ஆனால் வைக்கமாட்டோம். அப்போ பத்து சத்தத்திற்கு ஒரு உறுளைக்கிழங்கு போண்டா வாங்கலாம். என்ன வாங்கலாம் என்பதைப் பொறுத்துத்தான் காசின் பெறுமதி இருக்கும்.

ஆனால் தெருவில் போகும் கூடார மாட்டு வண்டியின் கூடாரத்தைப் பார்த்தால், அது ஒரு சதம், அதனைச் சப்பையாக்கி ஓட்டைபோட்டு. ஓட்டைக்குள் ஆணிபோட்டு கூடாரத்தின் பக்கங்களை அழகாகப் பூட்டி இருப்பார்கள். அந்தக்காலத்தில் யூரிப் பேஸ் இருந்திருந்தால் அரச உடமையை செல்லாக்காசாக்கியதற்கு போட்டுக் கொடுத்திருப்பார்கள். அனால் அந்தக்காலத்தில் என்ர காசு என்னவேணும் என்றாலும் பண்ணுவேன் என்ற போக்கு தான் இருந்திருக்கவேண்டும். ஏன் இப்பவும் அப்படி எண்ணுபவர்கள் இருக்கிறார்கள் தானே.

சரி அந்த நிலவுபோல் பளபளக்கும் சோடமூடி அது எதற்கு தெரியுமா?

அந்த மூடியில் நடுவே இரண்டு ஓட்டை போட்டு, அதற்குள் மெல்லிய நூல் கோத்து, பின் எமது இரண்டு கையிலும் இரு விரல்களில் நூலை மாட்டி விட்டு விட்டு இழுத்து இழுத்து விட்டால் அந்தமாதிரி சப்பை மூடி பளபளப்பாய்ச் சுத்தும். கைகளுக்குள் நிலவு சுத்தும் அழகே தனி. சுத்தும் வேகம் அறிய அம்மிக்கல்லில் முட்டவிட்டால் தீப்பொறி பறக்கும். கொஞ்சம் இன்னும் முயன்றிருந்தால், ஒரு பொறியியலாளராக வந்திருப்பேன். நல்லா காலம் மிஸ்சாகிவிட்டது. இல்லை என்றால் காங்கேசன்துறை ரெயின் யுத்தகாலத்தில் 30 வருடம் ஓடவில்லை. எல்லாம் மிஸ்சாகி இருக்கும்.

படிக்கபோனா என்ன சந்தைக்குப் போனா என்ன பொக்கற்றுக்குள் அது இருக்கும். வீட்டில் எல்லோருக்கும் தெரியும் கண்ணன் தானே செய்து விளையாடுவதில் மன்னன் என்று.

இப்பதான் கதைக்கு வாறேன். அப்பாவுக்கு சரியான பசி. காகா என்று கத்தியும் ஒரு காக்கையும் வரவில்லை. அன்று புரட்டாதி சனிக்கிழமை, தங்கச்சியும் சேர்ந்து கத்தினாள். அப்பா வாழை யில் போட்ட சோறு கறியை முற்றத்தில் வைத்துவிட்டு. நீங்கள் இரண்டுபேரும் கத்துங்கோ என்று சொல்லிப்போட்டு பசியில்லை செம்புங்குள் இருந்த தண்ணீரை அண்ணாந்து குடிக்கிறார்.



தங்கச்சி கத்துறாள். அப்பா! அப்பா! இங்கை அண்ணா வந்த ஒரு காகத்தையும் சாப்பிவிடாமல் துரத்திபோட்டார்.

எனக்கும் பசிக்குது அப்பா என்று கத்தினாள். இஞ்சவிடு காகம் வரும் வரைக்கும் நான் எழும்ப மாட்டேன். என்று சொல்லி அப்பா திண்ணையில வந்து இருந்திட்டார்.

காகம் வந்து இருந்து கொத்தி சாப்பிட்டது.

அப்பா வேட்டியை தளர்த்தி தன் இடுப்பை பார்த்தார்.அப்பாவுக்கு வந்ததே கோபம். அப்படி ஒருநாளும் அப்பாவை இப்படி நான் காணவில்லை. இப்ப காகம் இருக்குது நான் பறந்திட்டேன்.

காகத்தின் கழுத்தில் ஒரு சோடா மூடி. ஒரு நூலில் கோத்து கழுத்தில் கட்டிக்கிடக்கு. கோத்த கயிற்றின் மிச்சம் அப்பாவின் இடுப்பில கட்டி இருக்கு.

புரட்டாசி சனி விரதம் இருந்தால். சனிபகவான் காப்பான் என்று சொல்லுகினம். ஆனால் அந்த நேரம் பார்த்து சனிபகவான் அனுப்பிய அப்பாவின் அண்ணை, வீட்டை வந்தார். ஏன் கண்ணன் ஓடுறான். அண்ணை! 'நாலு பெடியளோடு சேர்ந்து அவங்கள் செய்த வேலையைப்பார்' என்று காகத்தை காட்டினார்.

கள்ளக் காககம் காட்டிக்கொடுக்வென்றே வந்தது போகுமா எல்லா அப்பாமாரும் இவன் மற்றவர்களுடன் சேர்ந்து கெட்டுப்போனன் என்று தான் சொல்லுவினம். ஆனால் எங்கட அப்பா அதுவும் புரட்டாசி சனி விரதம் அன்று அப்படி பொய் சொல்லவில்லை. ' எனக்கு அடுத்த பிறப்பு ஒன்று இருந்து நான் காகமாய் பிறந்தால் உன்ரை கையில பிடிபடப்படாது.' என்றார்.

இன்று புரட்டாதிச்சனி, . ஒரு வருடம் எப்பாடி ஓடியது என்று தெரியாது, இப்ப அப்பா உயிரோடு இல்லை. அப்பா இறந்த பின் அந்தக் காகத்தை ஒரு நாள் தேடிக் கண்டேன். எப்படி முயன்றும் பிடிபடவில்லை.அப்பா நினைவாகவே இருந்தது. இன்று என்ன அதிசயம்.

அதேகாகம் என்னருகில் வந்து வாழையிலையில் வைத்த சோற்றை உண்கிறது. அப்பாவாக அந்தக்காகம் இருக்கமுடியாது. அப்பா இறப்பதற்கு முன்பே இருந்த காகம் அல்லவா அது. காகம் இப்ப கொத்திக் கொத்தியுண்ணுகிறது. நான் மெல்ல காகத்தைப் பிடித்துவிட்டேன். பிடித்தகையோடு அறைக்குக்குள் ஓடுகிறேன். அங்கு அப்பாவின் கத்தரிக்கோல் ஒன்று கூரை ஒலைக்குள் செருகிக் கிடக்கிறது. காகத்தின் கழுத்தில் அன்று கட்டும்போது இருந்ததைவிட இப்ப மெதுவாக கயிற்றை வெட்டுகிறேன். உண்மையில் காகத்துக்கு வலிக்கு என்பதற்கும் அப்பால் அப்பாவுக்கு வலிக்கும் என்றொரு பொய்மனம்தான், ஆனால் ,அதுவே மெய்மனமாகிப்போச்சு.



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.





சேவியர்
(தமிழ்நாடு)

நடுப்பக்கம்

# குருதி வழியும் திரைகள்

திரைப்படங்கள் ஒரு காலத்தில் நல்ல செய்திகளைச் சொல்வதற்கான காட்சி ஊடகமாக இருந்தன. பழைய கால திரைப்படங்களைத் திரும்பிப் பார்த்தால் அவை ஏதோ ஒரு உயரிய சிந்தனையின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டன. பின்னர், சிறந்த மனிதர்களின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டன. அவை காலப்போக்கில் பல்வேறு மாற்றங்களைக் கண்டு இன்றைக்கு திரைக்கு குருதிப் பாசனம் செய்யும் சாதனமாக உருமாறியிருக்கின்றது !

குடும்ப உறவுகளைப் பற்றிய கதைகள், நட்பைப் பேசும் கதைகள், சமூகப் பிரச்சினையைப் பேசும் கதைகள் போன்றவையெல்லாம் இன்றைக்குப் பார்வையாளர்களால் ரசிக்கப்படுவதில்லை. அல்லது, அதை ரசிக்க முடியாத ஒரு ரசனைக் குழிக்கும் பார்வையாளர்கள் தள்ளப்பட்டுவிட்டார்கள். இன்றைய திரைப்படங்களின் தொடக்கம் முதல் கடைசி வரை அரிவாள்களே பேசுகின்றன. அவை குரூரத்தை அப்படியே காட்டவும் தயங்குவதில்லை என்பது தான் அதிர்ச்சியளிக்கும் உண்மை.

முன்பெல்லாம் வன்முறையைக் காட்டினால் கூட அதைத் திரைமறைக் காயாகக் காட்டினார்கள். ஒரு தொலை தூரக் காட்சியாக, அல்லது முக பாவனைகளின் மூலமாக இப்படித் தான் வெளிப்படுத்தினார்கள். ஆளவந்தான் திரைப்படத்தின் வன்முறை பார்வையாளரைப் பற்றிவிடக் கூடாது என்பதற்காக அதை கிராபிக்ஸ் காட்சிகளாக வடிவமைத்திருந்தார்கள்.

இன்றைக்கு அதெல்லாம் புறங்கையால் புறந்தள்ளப்பட்டுவிட்டன. வன்முறையைக் காட்டுவதே இயல்பு என்பதை சில பல இயக்குநர்கள் நிர்ணயித்துவிட்டார்கள். அதுவும் அப்பாவைக் கொல்வது, நண்பனை வெட்டுவது, குடும்பத்தையே அழிப்பது என்றெல்லாம் உறவுகளின் மீதான புனிதத்தையும், கண்ணியத்தையும் யதார்த்தம் எனும் பெயரில் குழிதோண்டிப் புதைத்து விட்டார்கள். கேட்டால், 'கலையைக் கலையாய்ப் பார்க்க வேண்டும்' என்பார்கள். அவர்கள் கலையை வியாபாரமாகத் தான் பார்க்கிறார்கள். வன்முறைப் படங்கள் வரிசையாத் தோல்வியடைந்தால் அவர்கள் 'கலை கலைக்காகவே' எனும் கோஷத்தோடு நிற்கப் போவதில்லை. சில்லறை புரளும் இடங்களுக்கு இடம்பெயர்வார்கள் என்பதே உண்மை.

இன்றைய உலகம் நம்மை இயலாமையின் கையில் கையளித்திருக்கிறது. நம்மால் எதையும் செய்ய முடிவதில்லை. சிக்னலில் நம்மீது வந்து வேண்டுமென்றே மோதுகின்ற ஒருவனைக் கூட நம்மால் எதிர்க்க முடிவதில்லை. காரணம் சமூகம் இன்றைக்கு எளியவர்களின் பக்கம் இல்லை. எளியவர்களின் குரல் எங்கும் எதிரொலிப்பதில்லை. எளியவர்களின் முகம் அரசுக்குத் தேவையற்றதாகிவிட்டது. எளியவர்கள் நியாயம் கேட்டால், அவர்கள் எளியவர்களின் உயிரையே பறித்து விடுகிறார்கள்.



ஆனால் எளியவர்களின் இதயத்தில் அந்தக் கோபம் அழிவதில்லை. நம்மீது திணிக்கப்படும் அநீதியை அழிக்கவேண்டும் எனும் வேட்கை தணிவதில்லை. அது உள்ளுக்குள் ஒரு உறங்கும் எரிமலையாய் காத்துக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட மனநிலையில் ஒரு படத்தைப் பார்க்கும்போது, அதில் தெரிகின்ற அதீத வன்முறை அவனை திருப்திப் படுத்துகிறது. தனக்கு எதிராக நிற்கும் சமூகத்தை அவன் வெட்டிச் சாய்ப்பதாய் தனக்குள் கருதிக் கொள்கிறான். தன்னால் செய்ய இயலாத ஒன்றை ஒருவன் செய்யும் போது கைதட்டுகிறான். ஹீரோவாகத் தன்னை மூன்று மணிநேரம் கருதிக் கொள்கிறான்.


இவை வெறும் திரைப்படங்கள் என்று சொல்லி வெறுமனே கடந்து செல்ல முடியாது, திரைப்படங்கள் சமூகத்தில் மிகப் பெரிய தாக்கத்தை உருவாக்குகின்றன. சுதந்திரப் போராட்டக் காலத்தில் அவை மக்களிடையே விடுதலை உணர்வைத் தட்டியெழுப்பும் மாபெரும் பணியைச் செய் தன. அதே போல, வன்முறைத் திரைப்படங்களப் பார்த்து பலர் கொலைகளைச் செய்ததும், துப்பாக்கிச்சூடுகள் நடத்தியதும் வரலாற்றில் வலியுடன் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. எனவே கலை வெறுமனே கலைக்கானதல்ல, என்பதை உணர்தல் அவசியம்.

இத்தகைய வன்முறைகள் செய்கின்ற முதல் கெடுதல், இதன் வீரியத்தை இயல்பாக்கிவிடுவது தான். தொடர்ந்து வன்முறைக் காட்சிகளையே பார்த்துக்

17 ஆம் பக்கம் பார்க்க...






# குருதி வழியும் திரைகள்

கொண்டிருக்கும் ஒருவருக்கு, வன்முறைகள் அதிக பாதிப்பை உருவாக்காமல் கடந்து சென்றுவிடும். ஒரு செயலை மீண்டும் மீண்டும் பார்க்கும் போது அது இயல்பாகிவிடுகிறது. ஒரு பொய்யை மீண்டும் மீண்டும் சொல்லும்போது அது பழக்கமாகிவிடுகிறது. ஒரு தவறை மீண்டும் மீண்டும் செய்யும் போது அது வாடிக்கையாகி விடுகிறது. அப்படித் தான் வன்முறைக் காட்சிகளை மீண்டும் மீண்டும் பார்க்கும்போது அது வெகு இயல்பாய் மாறிவிடுகிறது. அதன்பின் எந்த ஒரு அதிர்ச்சியையும், அதிர்வையும் உருவாக்காமல் ஒரு வன்முறை கடந்து போகலாம்.

வன்முறைத் திரைப்படங்கள் தங்களுடைய தீர்வை எப்போதுமே வன்முறையினால் தான் கண்டடைகின்றன. இப்படிப்பட்ட திரைப்படங்களைப் பார்க்கும் மக்கள்,'பிரச்சினையின் தீர்வு வன்முறையே' எனும் முடிவுக்கு வந்து விடுவார்கள். தங்கள் வாழ்க்கையிலே அத்தகைய பிரச்சினைகள் எழும்போது அதற்கான தீர்வு வன்முறைதான் எனும் சிந்தனை அவர்களிடம் எழும். ஒரு சவாலைச் சந்திக்க ஆயிரம் வழிகள் இருக்கலாம், ஆனால் வன்முறையே ஒரே வழி என கலையின் மூலம் மூளைச்சலவை செய்வது எத்துணை அபாயகரமானது இல்லையா ?

முன்பெல்லாம் திரைப்படங்கள் பார்ப்பது ஒரு திருவிழா போல. டெண்ட் கொட்டாயில் போய் படம் பார்ப்பது ஒரு சுற்றுலா செல்வது போல. வெளி அரங்குகளில், திருவிழா மேடைகளில் எப்போதேனும் திரைப்படங்கள் திரையிடப்படும்போது ஆயிரக்கணக்கான மக்கள் கூடுவார்கள். அதைத் தாண்டி திரைப்படங்களைப் பார்க்கும் வாய்ப்புகள் மிகக் குறைவு. இன்றைக்கு அப்படியல்ல. வீட்டுக்கொரு மரம் வைப்போம், ஆளுக்கு இரண்டு மொபைல் வைப்போம் என்று தானே உலகம் இயங்குகிறது.



அவர்களுடைய கண்ணசைவில் திரைப்படங்கள் கிடைக்கின்றன. ஓ.டி.டி தளங்கள் வந்தபின் அவை இன்னும் இயல்பாகவும், எளிதாகவும், உயர் தரத்திலும், ஏன் தணிக்கையைத் தாண்டிக் கூட கிடைக்கின்றன. இவை இன்றைய சிறுவர் மற்றும் இளையர் மனதில் மிகக் கடுமையான விளைவுகளை உருவாக்குகின்றன.

சமூகத்தின் மீது ஒரு அச்சத்தையும் இத்தகைய திரைப்படங்கள் உருவாக்கிவிடுகின்றன. உதாரணமாக காவல் துறையினரை வில்லனாகச் சித்தரிக்கும் படங்களையே தொடர்ந்து பார்ப்பவர்கள்



காக்கி சட்டையைப் பார்த்தாலே பயந்து நடுங்கும் சூழல் உருவாகும். கடத்தல், கொலை எனும் செய்திகளையே பார்ப்பவர்கள் துணிச்சலாய் கடைவீதிக்குக் கூட செல்லத் தயங்கும் நிலமை உருவாகும். இவையெல்லாம் நமது இயல்பான வாழ்க்கைக்கு வேட்டு வைத்து விடும் இல்லையா ?

நம்மீது திணிக்கப்படும் திரைப் படங்களை நாம் தவிர்க்க முடியாது. அவை ஏதோ ஒரு வகையில் நமது இளைய சமூகத்தினரைச் சென்றடைந்து விடுகின்றன. இருந்தாலும் அத்தகைய திரைப்படங்களை முடிந்தமட்டும் நிராகரிப்பது நல்ல பயனைத் தரும். பாக்ஸ் ஆபீஸ் ஹிட் ஆகாத வன்முறைத் திரைப்படங்கள், தயாரிப்பாளர்களின் குருதியைச் சுவைக்கத் தொடங்கும். இது ஒரு கார்ப்பரேட் யுகம், இங்கே இலாபம் இல்லாதவை புதைகுழிக்கு அனுப்பப்படும்.

தணிக்கைக் குழுக்கள் இன்னும் கொஞ்சம் தனது நிலையை இறுக்கமாக்கி, இத்தகைய திரைப்படங்கள் வெளி வருவதைத் தடுக்க வேண்டும். திரையரங்குகளில் சிறுவர்கள் நுழைவதை வேண்டுமானால் தடுக்கலாம், ஆனால் ஒடிடி தளங்களில் வரும்போது அவை தடுக்கப்படுவதில்லையே ? மொபைல் போன்றவற்றில் அதன் காட்சிகள் பரவுவதை யாரும் கண்காணிக்க முடிவதில்லையே !

ஊடகங்களும், விமர்சனங்களும் இத்தகைய திரைப்படங்கள் மீது தர்க்க ரீதியிலான கேள்விகளை முன் வைக்க வேண்டும். வெறும் இலாப நோக்கத்துக்கான திரைப்படங்களை சமூகக் காவலர்களான ஊடகங்கள் வலிமையாய் எதிர்க்க வேண்டும். மனிதத்தையும், அன்பையும் பரவச் செய்யும் திரைப்படங்களையே அவை ஆதரிக்க வேண்டும்.

யதார்த்தத்தைக் காட்டுகிறேன் பேர்வழி என ஹீரோவை வில்லனாகச் சித்தரிப்பது, திறமையாய்க் கொலை செய்பவனை தப்ப விடுவது, எந்த விதமான தண்டனையும் இல்லாமல் தப்பு செய்பவர்கள் ஹாயாய் திரிவது போன்ற எதிர்மறை கள்ளிச் செடிகளை இதயத் தோட்டத்தில் நடுவதற்கு நாம் அனுமதிக்கக் கூடாது.

நல்ல திரைப்படங்கள் தோல்வியடைய நாம் அனுமதிக்கும்போது, நம்மை அறியாமலேயே தவறான திரைப்படங்கள் வெளிவர அனுமதிக்கிறோம். திரை வாழ்க்கை திரையோடு நிற்பதில்லை,தரையோடும் பயணிக்கும் எனவே ஆழமாய்ச் சிந்திப்போம். அடுத்த தலைமுறையைப் பாதுகாப்போம்.






விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

17 வருட அனுபவம்



100% இலவச சேவை

நீங்கள் வீடு வேண்டுவதற்கான அனைத்து விதமான வங்கி கடன்களையும், மற்றும் வீடு சம்மந்தப்பட்ட ஆலோசனைகளையும், மிகச்சிறந்த முறையில் தமிழிலே உங்களுக்கு செய்து தரப்படும்.


Sudharshan Arasapillai

-Bankkaufmann-
-Zertifizierter Baufinanzierungsbetreuer (Univ. Passau)-

Bezirksleiter der Bausparkasse Schwäbisch Hall AG
im Hause der Volksbank Rhein-Lippe eG
Am Neutor 23, 46535 Dinslaken

Büro: 0281- 922 6994
Mobil: 01522-2684277
s.arasapillai@schwaebisch-hall.de







# நீங்கள் எந்தப் பொருளையும் தொட முடியாது!

**நாம்** தினமும், நொடிக்கு நொடி எதையாவது தொடுகிறோம். சுற்றிலும் இருப்பவை, உதாரணமாக, உங்கள் கைப் பேசி, கணினி அல்லது நீங்கள் அணிந்து இருக்கும் உடை, இவை அனைத்தையும் நாம் உணருகிறோம். ஆனால், இதெல்லாம் உண்மையா? இதில் மாயை ஏதேனும் உள்ளதா?

நமது சுற்றுவட்டாரத்தில் உள்ள அனைத்தும் அணுக்களால் ஆனவை. அணுக்கள், பொருளின் மிகச் சிறிய கூறுகளாகும். இந்த அணுக்களைப் பற்றி ஆய்வு செய்யும் துறையாகிய குவாண்டம் இயற்பியல், நம்மைச் சுற்றியுள்ள உலகைப் புரிந்து கொள்ள ஆச்சரியமளிக்கும் பல்வேறு விஷயங்களை நமக்கு வழங்குகிறது.

அணுக்களால் ஆன உலகம் நமது அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாக இல்லை என்று தோன்றலாம். அதை நாமே பார்ப்பதில்லை, தொடுவதுமில்லை. நீங்கள் எதையும் உண்மையில் தொட முடியாதது ஏன் என்பதைப் புரிந்து கொள்ள, முதலில் அணுக்களில் உள்ள எலெக்ட்ரான்கள் எப்படிச் செயல்படுகின்றன என்பதைக் கற்றுக் கொள்ள வேண்டும். இதை முன் நின்று புரிந்து கொள்வதற்கு, அணுக்களின் அமைப்பின் அடிப்படைத் தகவலை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஆரம்பத்திற்கு, “தொடக்கக்கூடிய“ பொருள் அணுக்குத்தரத்தில் மிகச் சிறிய பகுதிகளில் தான் குவிந்து கிடக்கின்றன, அதையே அணுக்கரு என்பார்கள். இந்த அணுக்கருவைச் சுற்றி வெற்று இடம் உள்ளது, ஆனால், இதில் உள்ள எலெக்ட்ரான்கள் மற்றும் புரோட்டான்கள் நுண்ணிய அளவில் கோர்ப்புகளாகச் செயல்படுகின்றன. ஒவ்வொரு அணுவும் கொண்டுள்ள



எலெக்ட்ரான்களின் எண்ணிக்கை அதன் அடிப்படைப் பொருளின் தன்மையைப் பொறுத்தது. போட்டான்கள் போல, எலெக்ட்ரான்களும் துகளங்கள் மற்றும் அலைகள் என்ற இரட்டைத் தன்மை கொண்டவை. இந்த துகளங்கள், எதிர்மறை மின் சாரத்தை உடையவை, மேலும் தங்களின் இயல்பால், எதிர்மறை சார்ஜ்கள் கொண்ட மற்ற துகளங்களை விரட்டும் திறனும் கொண்டவை.



Dr.நிரோஷன் தில்லைநாதன்
(யேர்மனி)

எலெக்ட்ரான்கள் நேரடியாக ஒன்றையொன்று தொடாத விதத்தில் இதன் செயல்பாடுகள் நடைபெறுகின்றன. ஆனால், அவற்றின் அலைச் செயல்பாடுகள் ஒரே இடத்தில் இணைந்து செயல்படலாம், ஆனால் ஒருபோதும் ஒருவரையொருவர் தொடாது. அதே நிலை மனிதர்களுக்கும் பொருந்தும். நீங்கள் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தபோது அல்லது படுக்கையில் படுக்கும்போது உங்கள் உடலில் உள்ள எலெக்ட்ரான்கள், அந்த நாற்காலியை உருவாக்கும் எலெக்ட்ரான்களை விரட்டி விடுகின்றன. நீங்கள் அதற்கும் உங்கள் உடலுக்கும் இடையில் மிக மிகச் சிறிய இடைவெளியில் மிதக்கிறீர்கள்.

எலெக்ட்ரான்களின் விசித்திரமான தணிக்கைகளால், நாம் ஒருபோதும் எதையும் உண்மையில் தொட முடியாதது உண்மையானால், நாம் உணர்வுகளை உண்மையாக உணர்வதாக நாம் ஏன் கருதுகிறோம்? இதற்குப் பதில், நமது மூளை உலகத்தை எப்படி உணர்கிறது என்பதில் இருக்கிறது.

இச்சமயத்தில், பல காரணிகள் செயல்படுகி ன்றன. நமது உடலை உருவா க்கும் நரம்பு செல்கள் (nerve cells), நம்மை ஒரு பொருளை உணர்ந்து தொடுவது போல் சிக்னல்களை நம் மூளைக்கு அனுப்புகின்றன. உணர்வுகள் எளிதாக எலெக்ட்ரான்களின் தொடர்புகளால் உருவாகின்றன, மேலும் மின்னியாக்கக் களங்கள் (elec tro magnetic fields) நம்மை ஊடுருவுகின்றன.

உண்மையில், எலெக்ட்ரான்கள் ஒருவரையொருவர் தொடுவதில்லை என்பதால், நீங்கள் உங்கள் நாற்காலியின் மேல் மிதந்துகொண்டு இருப்பதை தவிர, வியப்புடன், நமது உணர்வுகள் எப்படிப்பட்ட உண்மையையும் உணர்வுகளால் உருவாக்குகின்றன என்பதே ஆச்சரியமூட்டும் விஷயமாகும், இல்லையா?

---

# திரைக்கு வராத சங்கதி நூல் வெளியீடு



## தமிழக சினிமாக்கள் எமது போராட்டத்தை முழுமையாகச் சித்தரிப்பதில்லை!

எழுத்தாளரும் பத்திரிகையாளருமான சூரன் ஏ.ரவிவர்மா எழுதிய “திரைக்கு வராத சங்கதி“ நூல் வெளியீட்டு விழா வடமராட்சி தேவரயாழி இந்துக் கல்லூரி மண்டபத்தில் பத்திரிகையாளர் பாரதி இராஜநாயகம் தலைமையில் கடந்தமாதம் நடைபெற்றது.



வரவேற்பு உரையை திருமதி ரவிசக்தி ரவிச்சங்திரன் நிகழ்த்தினார். அறிமுக உரையை ஒருவன் இணையத்தள செய்தி முகாமையாளர் அ.நிக்ஸன் நிகழ்த்தினார். வெளியீட்டு உரையினை ஜீவநதி, கடல் ஆகிய சஞ்சிகையின் ஆசிரியர் க.பரணீதரன் நிகழ்த்தியதை தொடர்ந்து யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை தலைவர் பூங்குழலி சிறிசங்கீர்த்தனன் ஆய்வுரையை நிகழ்த்தினார்.

அ. நிக்ஸனின் உரையில் வடக்குக் கிழக்கில் இருந்தும் புலம்பெயர் தேசங்களில் இருந்தும் வெளிவரும் குறிப்பிடக்கூடிய சில குறும் திரைப்படங்கள் மாத்திரமே தமிழர்களின் எண்பது வருட அரசியல் உரிமைப் போராட்டம் பற்றிய வலிகளையும் உண்மைகளையும் வெளிப்படுத்துகின்றன. ஆனால் தமிழக சினிமாக்கள் எமது போராட்டத்தை முழுமையாகச் சித்தரிப்பதில்லை என்று பத்திரிகையாளர் அ.நிக்ஸன் தெரிவித்துள்ளார். முதல் பிரதியினை புத்தக ஏழுத்தாளரது சகோதரிகள் பெற்றுக்கொள்ள ஊடக கற்கைகள் தலைவி பூங்குழலி ஆகியோர் இணைந்து வழங்கி வைத்தனர். இந்நிகழ்வில் ஊடவியலாளர்கள், இலக்கியவாதிகள், ஊடக நிறுவனங்களின் ஆசிரியர்கள், நண்பர்கள் உறவினர்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.


புலம்பெயர் நாடுகளில்
வாயோதிபர் சந்திக்கும்,
சந்திக்கப் போகும்
பிரச்சனைகளும், தீர்வுகளும்
Pflegedienst Bergstraße
Frau Kanthavathany Selvanathan
Sunday
29.09.2024
11:00
அன்புடனும்,
அக்கறையுடனும்
அழைக்கிறோம்,
மதிய உணவு , மற்றும்
மென்பானங்கள், இலவசம்
CALL :
062 069 378 57
MORE CONTACT INFO:
www.pflege-bergstrasse.de
இடம்
Kasinostrasse 25,
42103 Wuppertal
நேரம் 11:00 மணி
YouTube



# இந்த உலகம் வேண்டாம் புதியதோர் உலகம் செய்வோம்

இந்த உலகம் அழிந்து விட வேண்டும் என்ற சிந்தனை என்னுடைய மூளை முழுவதிலும் நிறைந்து விட்டது. வேண்டாம். இந்த உலகம் வேண்டாம். எல்லாம் அழியட்டும். புதிய ஓர் உலகம் உதிக்கட்டும். அங்கு பிஞ்சு உள்ளங்களும், கள்ளங்கபடமற்ற மனிதர்களும் வாழட்டும். நான் யார்? என்னுடைய உறவுகள் யாவர்? நான் ஏன் வாழுகின்றேன்? என்னுடைய எதிர்காலம் என்ன? இவ்வாறான எந்தக் கேள்விகளுக்கும் விடை தெரியாமல் ஒரு உலகம் இந்த பூமியின் பல பகுதிகளில் வாழ்ந்து வருகின்றது. யார் இவர்கள்? காரணம் என்ன? எம்மால் என்ன செய்ய முடியும்? இவை பற்றி என் மனக்குமுறலை இக்கட்டுரையில் கொண்டு வருகின்றேன்.

காலம் கற்றுத் தந்த பாடத்துடனேயே நாம் வாழுகின்றோம். அப்பாடம் சரியான முறையில் அமையாது விட்டால், எம்முடைய பாதை வழி தடுமாறிப் போவதற்குச் சந்தர்ப்பங்கள் அதிகமாக அமைகின்றன. அதற்கான காரணங்களைக் கண்டு கொண்டு,





கௌசி சிவபாலன் (யேர்மனி)

காரண கர்த்தாக்களைத் திருத்துவதற்கு வழி செய்ய வேண்டிய கடமை ஒவ்வொரு மனிதர்களுக்கும் இருக்கின்றது.

முதன் முதலாக என் கண்கள் இவ்வாறான மனிதர்களை நோக்கிய இடம் கிரேக்கம். இங்குதான் முதன் முதலாக நேரடியாக இந்த அபூர்வ மனிதர்களைச் சந்திக்க நேர்ந்தது. அவர்களைக் கண்டபோது மனத்துக்குள் பயமா! பரிதாபமா! அழுகையா! எது என்று சொல்ல முடியாத வேதனை எனக்குள்ளே புகுந்தது. இவர்கள் ஜெர்மன் மொழியில் குறிப்பிடப்படும் Zombi போல இருந்தார்கள். கிரேக்கத்திலே அந்தப் பாதையூடாகப் பயணம் செல்வதைத் தவிர்த்தேன். ஆனால், அன்றிலிருந்து சிந்தித்தேன். கிரேக்கத்தில் அந்தப் பாதை இவர்களுக்காக ஒதுக்கப்பட்டு விட்டது. இல்லை அவர்களுக்கு இந்தப் பாதையைப் பரிசளித்து விட்டார்கள். கவனிப்பாரற்றுக் கிடந்தது அந்தப் பாதை மட்டுமல்ல அந்தப் பாதையில் வாழுகின்ற மனிதர்களுமே. இறக்காத, ஆன்மா இல்லாத, விருப்பமில்லாது சுற்றித் திரிகின்ற மனிதர்கள் என்று இவர்களைச் சொல்லலாம்.

ஜெர்மனி பிரெங்போர்ட் இரயில் நிலையம், ஹம்பேர்க் போன்ற பல இடங்கள், அமெரிக்காவின் Kensington ave போன்ற பகுதிகள், ஆசிய நாடுகள் போன்ற உலகம் முழுவதிலும் தன்னுடைய ஆட்சிக்குள் மக்களை இந்த அகோர அரக்கன் என்று சொல்லப்படுகின்ற போதைப்பொருள் அடக்கி வைத்திருக்கின்றது

போதைக்கு அடிமையான ஒவ்வொரு மனிதர்களும் ஒவ்வொரு கதையைச் சுமந்து திரிகின்றார்கள். 18 வயதுக்கு உட்பட்ட இளைய சமுதாயத்தினரும் இவர்களில் அடங்குகின்றார்கள். தம்முடைய கடைசி ஊசிக்காகக் காத்திருக்கின்றார்கள். பெற்றோரின் குடும்பப் பிரச்சினைகளாலும் வீட்டிற்குள் நடக்கின்ற அகோர யுத்தத்தாலும் பாதிக்கப்பட்ட ஒரு பெண் வீட்டைவிட்டு ஓடிவிடுகின்றாள். இளைஞர்கள் நல அலுவலகத்தைத் தஞ்சம் அடைகின்றாள். அவர்களும் அவளை ஒரு குடும்பத்திடம் ஒப்படைக்கின்றார்கள். பராமரிப்புத் தந்தையால் பாலியல் இம்சைக்கு உட்படுகின்றாள். அங்கு வாழ முடியாது மீண்டும் இளைஞர்கள் நல அலுவலகத்திடம் அடைகின்றாள். வேறு ஒரு குடும்பத்தில் ஒப்படைக்கப்படுகின்றாள். அங்கே வீட்டுத் தலைவனால் சித்திரவதை அனுபவிக்கின்றாள். முடிவாக வீதிக்கு வருகிறாள். அவளுக்கு அந்தப் பாலிய வயதில் மனத்துக்கு அமைதியைக் கொடுக்கின்றது போதை. ஆரம்பத்தில் புகைத்தாள். பின் தூளாக வாங்கிய ஹெரோயினை ஒரு கரண்டியில் போட்டு லைட்டரின் உதவியுடன் உருக்குகிறாள். திரவமாகிய ஹெரோயினை ஊசியினுள் செலுத்துகிறாள். சொர்க்கத்தைக் காணுகிறாள். மயங்கிப் போகிறாள். இது நாளுக்கு நாள் அவளை அதற்கு



அடிமையாக்குகிறது. இதற்கு யார் காரணம்? அவளா காரணம்? சமூகமா காரணம்? அந்த இடத்திலிருந்து அவளை மீட்க முடியாது. அவளுக்காக நாம் என்ன செய்ய முடியும்?

இவ்வாறுதான் ஒவ்வொரு மனிதரும் ஒவ்வொரு கதை சுமந்து கொண்டு திரிகின்றார்கள். ஒருவர் இருவராகி, இருவர் மூவராகி இன்று உலகத்தில் தொற்றுநோய் போல் இப்பிரச்சினை தொடர்ந்து கொண்டு போகின்றது. நாம் பொறுப்பெடுப்பதா? நாடு பொறுப்பெடுப்பதா? விற்பனையாளன் திருந்துவதா? கைநிறைய பொருளாதாரத்தை அரசாங்கம்

28 ஆம் பக்கம் பார்க்க...











## பிராங்பேட் நகரில்

# ஆடல் அமுதம்

திலகநர்த்தனாயத்தின் பொன் விழா (50 ஆவது ஆண்டுவிழா) கடந்த 23.06.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று ஜேர்மன். பிராங்பேட்டில் உள்ள Enkheim Volshaus மண்டபத்தில், மண்டபம் நிறைந்த பார்வையாளர்கள் மத்தியில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.றுக் கொண்டனர்.

இரட்டையர்களான வசுந்தரா, யசோதரா அவர்கள், திருமதி பவானி இராஜசிங்கம் அவர்களிடம் நடனம் பயின்று, அவரது ஆசியுடன், தாய் மண்ணில், சாவகச்சேரியில் தமது தாயின் பெயரரல். தந்தையின் ஆசியுடன் 1974 ஆண்டு இந்நடனப்பள்ளி ஆரம்பிக்கப்பட்டு பின் புலம் பெயர்ந்து திருமதி வசுந்தரா சிவசோதி அவர்களால் ஜேர்மனியில் 1996 இல் இருந்து இற்றைவரை சிறப்பாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அன்றைய விழாவின் ஆரம்ப நிகழ்வுகளாக, மங்கல விளக்கேற்றி, நடராஜர் பூஜையைத் தொடர்ந்து மாவீரர்களை நினைவு கூர்ந்து அகவணக்க நிகழ்வு இடம் பெற்றது. அதனைத் தொடர்ந்து திரு. சிவசோதி அவர்களின் வரவேற்புரையைத் தொடர்ந்து நடன நிகழ்வுகள் நடைபெற்றன.



முதல் நிகழ்வாக தியானஸ்லோகம் எனும் வணக்க நிகழ்வில் 30 க்கும் மேற்பட்ட திலக நர்த்தனாலய மாணவிகள் நடனமாடி குருவின் ஆசியைப் பெற்றமை சிறப்பாக அமைந்தது. அரம்பப்பிரிவு மாணவிகளின் ஸ்வரஜதி எனும் நடனத்தை வயதுக்கு மீறிய முதிர்ச்சியுடன் மிக நேர்த்தியாக ஆடியிருந்தனர். காளிங்க நர்த்தனம் எனும் உருப்படியை ஆடிய மாணவிகள் நிஜமாக, பாம்பினைப்போல் வளைந்து நெளிந்து ஆடி, பாம்பாகவே மாறிப் பார்வையாளர்களைத் திகைப்பில் ஆழ்த்திவிட்டனர். வர்ணம், காளிங்க நர்த்தனம் ஆகிய உருப்படிகளை செல்வி சிவப்பிரியா சிவசோதி அவர்கள் தயாரித்தளித்திருந்தமை சிறப்பம்சமாகும். இந்நிகழ்வில் திலக நர்த்தனாலய பழைய மாணவிகளின் (தற்போது நடன ஆசிரியர்கள்) நடனம் ஆடியமை விழாவிற்கு மெருகூட்டியிருந்தது.



ஆற்றுகைத் தேர்வில் சித்தியடைந்த மாணவிக ளின் நடன அரங்கை அதிரவைத்து, பிரதமவிருந்தினர் உட்பட பல இடங்களிலிருந்தும் விழாவிற்கு வருகைதந்த, புகழ்பெற்ற நடன ஆசிரியர்களின் சிறப்புரைகளும் இடம்பெற்றது. இறுதி நிகழ்வாக அனைவருக்கும் நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டன. திலகநர்த்தனாலய அதிபர் திருமதி வசந்தரா சிவசோதி அவர்களும் மாணவிகளும் பெரும் பாராட்டினைப் பெற்றனர்.

**நன்றி.பாலா.(பிராங்பேட்)**





II ஆம் பக்கத் தொடர்ச்சி...

# மெய்ப்பொருள் காண்பது அ(ரிது)றிவு

கொண்டு போய் வித்ததா சரித்திரம்
இல்லை. எல்லாமே வாசலில வைச்சே
சனம் வாங்கி முடிச்சிடும்.

ஊடகம் எண்டதுக்கு அப்ப ஊர்ப்
பேப்பர்கள் தான் சரியான உதாரணம்.
அது ஊரெல்லாம் சனத்தோட ஊடுருவி
யாழ்ப்பாணத்தில செய்தியாய் இல்லா
மல் வாழ்வாய் இருந்திச்சுது. அறிவிக்க
ப்பட வேண்டிய மரணங்கள் கூட அறிவி
த்தலா இல்லாமல் செய்தியாய்த் வரும்.
அவசரம் உணர்ந்து. சோதினைக்கு
Apply பண்ணிற ஒரு பள்ளிக்கூடத்தில
பிறகு இடம்பெயர்ந்து வந்து படிக்கிறது
வேறொரு பள்ளிக்கூடத்தில, கடைசியாச்
சோதினை எழுதிறது இன்னொண்டா
இருக்கும். முதலாவது சோதினை ஒரு
பள்ளிக்கூடத்திலேம் செல்லடிச்சு ஓடிப்
போய் ரெண்டாவது சோதினை எந்தப்
பள்ளிக்கூடத்தில எண்டு பாக்கிறது
க்கும் Index number ஐ விடியவில
தேடிக் கண்டு பிடிக்கிறதும் Paper இல
தான். சோதினை index number
மட்டும் இல்லை கிளாலிப்பயணத்துக்கு
இண்டைக்கு எந்த token காரர் போக
லாம் எண்டைதையும் பேப்பரில பாத்
துத்தான் ஆக்கள் பயணம் போறது.

சனங்கள் பேப்பர் இரவல் வாங்கிறது
குறைவு, சந்தையில மரக்கறி விக்கற
வனில இருந்து சைக்கிள் கடைக்கா
ரன், சலூன் காரன் எண்டு எல்லாரும்
பேப்பர் வாங்கி வேலைக்கு நடுவில
கொஞ்சம் கொஞ்சமா வாசிச்சு முடிப்பி
னம். அப்ப எல்லாரும் பேப்பர் வாங்கி
வாச்சாலும் ஊரெல்லாம் சந்திக்குச் சந்தி
வாசிக சாலை இருக்கும். சரிச்ச அடிச்ச
மேசையில பேப்பருக்கு நடுவில குறுக்
கால ஆரும் களவெடுக்காம இருக்க
கம்பி வைச்சு பூட்டுப் போட்டிருக்கும் .
அங்க போய் நிண்ட படி தான் வாசி
க்க வேணும். பழைய பேப்பர் எண்டால்
இருந்து வாசிக்கலாம். அனேகமா
அண்டைக்கு வாற எல்லாப் பேப்பரோட
weekend பேப்பரும் இருக்கும்.

வீட்டில இருக்கிற வேலை வெட்டி
இல்லாத (retired ) ஆன ஆம்பிளைக
ளும் அதோட வெளீல இருந்து லீவில
வந்திருக்கிறவை எல்லாரும் வருவினம்.
என்னதான் வீட்டை பேப்பர் வாங்கினா
லும் வந்து மிச்ச எல்லாப் பேப்பரையும்
வாசிச்சு முடிச்சிட்டு வெளீல இருக்கிற
வாங்கில இருந்து ஊர்ப்புதினம் அரசி
யல் நிலை எல்லாம் கதைச்சிட்டுத்தான்
திருப்பி வீட்டை போவினம். இது எல்லாம்
ஒரு வகை pocket political meeting
மாதிரித்தான்.

வாசிகசாலை கொஞ்சம் பெரிசாக
வாசிப்பைத்தாண்டி அது சனசமூக நிலை
யமாக மாறும். வாசிப்போட நிக்காம
அறிவோட அரசியல், விளையட்டு,
சமயம் எண்டு எல்லாத்தையும் வள
க்கத் தான் இது. இப்ப ஊரில இருக்கிற
கோயில், குளம் ,காணி, கட்டிடம் எல்லாம்
ஏனெண்டு காரணம் இல்லாமல்
உழரசவ இல நிக்க அந்தக் காலத்தில
எழுதப்படாத சட்டங்களால தான் இந்த
சனசமூக நிலையங்கள் நடந்திச்சுது.
பேப்பர் வாசிக்க எண்டு தொடங்கி வாசிச்
சதோட நிக்காம கடைசீல சனத்துக்கும்
சமூகத்துக்கும் சேவை எண்டு மாறின
தெண்டால் அதுக்குப் பேப்பர் தான்
காரணம். அந்த நாட்களில பட்டறிவை
பகுத்தறிய பேப்பரும் அதைப் பகுத்துப்
பாக்கிற ஆக்களும் இருந்திச்சினம்.

இப்ப எல்லாச் செய்தியையும் வாச்
சிட்டு இவர் வந்தால் ஏதாவது தீர்வு கிடை
க்குமா கிடைக்காதா, அவர் சொன்ன
மாதிரிப் போராட்டம் வெடிக்குமா வெடி
க்காதா எண்டு தேடத் தொடங்கி, குழம்பிப்
போய் தொடந்து வாசிக்க accident ம்,
வெட்டுக் கொத்தும் எண்ட செய்தி தான்
இருக்கும். முன்பக்கத்தில வாற news
முக்கியத்துவம் பெற நடக்கிற சில நல்ல
விசியங்கள் வாசிக்கப்படாமலே போக
ஏதோ இப்ப ஊரில எப்பவுமே பிரச்சி
னைதான் எண்ட மாதிரி negative
thoughts மனதில வந்திடும்.

பேப்பரில இடம் நிரப்பக் குறை
நிரப்புப் பேரணையாக வாழ்த்துக
ளும் அஞ்சலிகளும் போட்டு நிரப்பத்
தொடங்கி கடைசீல அது பத்துப் பக்கமா
மாறத் தொடங்க இடைவெளியை நிரப்பி
றது news ஆ மாறீட்டுது.

ஐஞ்சாம் வகுப்பில இருந்து ஆடியபா
தப் பள்ளிக்கூடம் tiu pass பண்ணி
னதைப் பாராட்டி வாழ்த்திற பத்துப்
பேரும், இவை எல்லாருக்கும் நான் தான்
படிப்பிச்சனான் எண்டு சுய விளம்பரம்
போடிற ரியூசன் வாத்திமார் கொஞ்சப்
பேரும், இருக்கேக்க பாக்க வராம இப்ப
பக்கம் முழுக்க பாட்டி ஒண்டுக்குப் பத்
தாவது வருசஅஞ்சலியும், ஒண்டிலிர
ந்து நூறு வயது வரை பிறந்த நாள்
வாழ்த்துகளும் தான் முக்கியத்துவம்
பெறத்தொடங்கீட்டுது.

வீட்டு விசேசத்தை நேர வாழ்த்தி,
what‘s app இல வாழ்த்தி, face book
இல வாழ்த்தி அது எல்லாம் பழசாப்
போக பேப்பரில படம் போட்டு வாழ்
த்தீட்டு வாழ்த்துவோர் எண்டு அன்பு
அப்பா, ஆசை அம்மா எண்டு அந்
தக்கால த்தில ரேடியோ சிலோன் பிற
ந்த நாள் வாழ்த்து மாதிரி அடைமொழி
யோட ஊருக்கெல்லாம் தெரியப் போடி
றது தான் அன்பின் வெளிப்பாடா
போட்டுது. இதுக்கு மேலால கலர்படத்தோட
கோயில் கும்பாபிசேகம் எண்டு வழக்கமா
வாற ஐஞ்சு பேரோட இன்னும் கொஞ்சப்
பேரின்டை வாழ்த்துச் செய்தியோடேம்
படத்தோடேம் வாற விசேட மலர் வெளி
யிட்டிக் கொஞ்ச நாளிலியே சில நேரம்
கோயில் நிர்வாகம் கோட்டில நிக்குதாம்
எண்டு செய்தியிலேம் வரும்.

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகி
றான் எண்டதுக்குப் புத்தகம் தேவேல்லை
பேப்பர் வாசிப்பதால் எண்டு போட்டாலே
சரி எண்ட அளவுக்கு அப்பத்தக் காலத்
தில பேப்பரும் வந்திச்சுது சனங்களும்
அதை வாசிச்சுது. ஆனா இப்ப முன்ப
க்கம் கனக்க கவர் பண்ணிறம் எண்டு
எல்லா நெறள ஐயும் போட்டிட்டு மூண்டு
பக்கத்துக்கு தொடர்ச்சி எண்டு போட
மூண்டாவது தொடர்ச்சீல முதல் பக்க
news மறந்தே போடும்.

அப்ப தங்கடை பேப்பருக்கு எண்டு
தனித்துவமா reporters, editors
எண்டிருந்த காலம் மாறி இப்ப ஒரே ஆள்
தான் ஊரில இருக்கிற எல்லாருக்கும்
நெறள குடுப்பார் போல இருக்கு.
ஏனெண்டால் முதல் நாள் இரவு web
இல இருக்கிறது தான் அடுத்த நாள்
print இலயும் வரும். அதோட ஆற்றேம்
ஒராளின்டை கருத்து Facebook இல
கூட likes வந்தா அது கூடக் கொஞ்ச
நாளில செய்தியாக்கூட வரும்.

இன்னும் காலமை பால்த்தேத்ண்ணி
யோட பேப்பரை வாங்கிப் பாத்திட்டு
பின்னேரம் பட்டறிவோட போய்க்
கதைச்சு பகுத்தறிவோட வாற ஆக்
களும், ஆராஞ்சு எழுதிற ஆசிரியர்க
ளும், சில பேப்பரும் ஊர் உலகத்தில
இன்னும் இருக்குது எண்டது சந்தோசம்.

“மெய்ப்பொருள் காண்பது அறிவாய்
இருந்தது அரிதாய் போக்கூடாது,
போகாது எண்ட நம்பிக்கையுடன”.

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY
தாயகத்திலிருந்து வெளிவரும்
தமிழர் பொருண்மியம்
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பெற்றுக்
கொள்ள QR code இனை scan செய்து
whatsapp குழுவில் இணையுங்கள்
+94 777 304 010
+94 70 267 5575



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# பரிணாமத்தின் இயல்பு பக்குவமா?

## இப்படிக் கேள்விக்குள் கேள்வியாகத் தொடர்ந்து கொண்டே இருக்கிறது வாழ்க்கை



தீபா ஸ்ரீதரன்
(தாய்வான்)

எனக்கு இந்தச் செல்ஃப் லவ், செல்ஃப் ரெஸ்பெக்ட் போன்ற சொற்றொடர்களில் நம்பிக்கை இல்லை. அன்பு, மரியாதை, கருணை இவையெல்லாம் ஒருவர்க்கொருவர் பரி மாறிக் கொள்ள வேண்டிய உணர்வுகள். இவற்றை நமக்கு நாமே வைத்துக் கொள்வதிலோ, இல்லை நம்மையே நாம் நேசிப்பதற்கோ நம்மையே நாம் மதித்துக் கொள்வதற்கோ எனக்குத் தெரிந்தவரையில் எந்தத் தேவையும் இல்லை. அதற்கு அர்த்தம் இருப்பதாகவும் எனக்குத் தோன்றவில்லை. மரியாதை என்பது அன்பின் நீட்சி. நாம் ஒருவர் மீது வைத்திருக்கும் நம்பிக்கைக்கு நாம் தரும் அங்கீகாரம். அது ஒரு அன்பின் வெளிப்பாடுதான் என்று நினைக்கிறேன். ஓர் உயிர் வளரும் போது, அது தன் மேல் நம்பிக்கையும், தன்னை எப்படியாவது காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற உள் உந்தலையும், தன் மீது இச்சையும், கொண்டிருந்தால்தான் அதன் வாழ்க்கை நீடிக்க முடியும். அது இயற்கையாகவே ஓர் உயிருக்குள் அமைந்த தன்மை. அதனால் தனியாகச் சுயமரியாதை சுய அன்பு என்று மெனக்கெடுவதில் எந்த அர்த்தமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஓர் இனமாக ஓர் உயிர் பல்கிப் பெருகுவதற்கு இந்த உணர்வுகளைச் சக உயிர்களுடன் பகிர்ந்து கொள்வது முக்கியம். அது அவசியம். இதைச் செய்ய முடிந்ததைத் தான் மனித இனத்தின் ஆளுமை என்று நான் நம்புகிறேன்.

எனவே ஓர் உயிர் தனக்குத்தானே கொடுத்துக் கொள்ள வேண்டியதென நான் நம்புபவை நல்ல உணவு, ஆரோக்கியமான உடலுக்கான வாழ்க்கை முறை. புலன்களைத் தீட்டிக்கொண்டு அதன் செயல்பாடுகளை விரிவடையச் செய்வதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொள்வது, இந்தப் பிரபஞ்சத்தைப் பற்றிய புரிதலை அறிந்து கொள்ளும் அறிவுக்கான தளத்தில் தன்னை விட்டெறிந்து கொள்வது. இவை அனைத்திலும் நான் எப்போதுமே அதிகக் கவனம் செலுத்துகிறேன்.

நாம் உண்ணும் உணவு பற்றிய அறிவியலைத் தெரிந்து வைத்துக் கொள்வதில் எனக்கு அதீத நாட்டம் உண்டு. என்னால் முடிந்தவரை அதை நான் செய்து கொண்டிருக்கிறேன். உடற்பயிற்சி, ஆரோக்கியமான வாழ்க்கை முறை போன்றவற்றையும் தவறாமல் கடைப்பிடிக்கிறேன். இதோ 44 வருடங்கள் முடிந்துவிட்டது. ஒவ்வொரு வருடமும் ஏதோ ஒன்றைப் புதிதாகக் கற்றுக் கொண்டுதான் இருக்கிறேன். புலன்களுக்கும், அறிவுக்கும் என்னால் முடிந்தவரை புதிய சூழ்நிலைகளையும் அனுபவங்களையும் ஏற்படுத்திக் கொடுத்துக்கொண்டேதான் இருக்கிறேன். இவற்றில் எனக்குப் பெரும் நிறைவான ஒரு மகிழ்ச்சி உண்டு.

அடுத்து சக உயிர்களை அரவணைத்துக் கொள்ளும் முயற்சி.ஒவ்வொரு வருடமும் சளைக்காமல் மனித மனங்களைப் புரிந்து கொள்ள முயற்சி செய்து கொண்டேதான் இருக்கிறேன். ஒவ்வொரு மனமும் ஒரு வனமாக விரிந்து தனக்குள் ஓராயிரம் பேரொலிகளை ஒளித்துக் வைத்துக்கொண்டிருப்பதை என்னால் இன்று உணர முடிகிறது. அவற்றின் தன்மை எனக்கு எப்போதும் வியப்பை கொடுத்துக் கொண்டே இருக்கிறது.

25 ஆம் பக்கம் பார்க்க...



Nandys Restaurant Bochum, Kortumstraße 9, 44787 Bochum/GERMANY | Tel: 0049 234 610 68 540

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



24 ஆம் பக்கத் தொடர்ச்சி...

# பரிணாமத்தின் இயல்பு பக்குவமா?

பொதுவாக மனிதர்களை அணுகுவதிலும், அவர்களுடன் உணர்வுகளைப் பரிமாறிக் கொள்வதிலும் எனக்கு எந்தத் தயக்கமும், பயமும் இருந்ததில்லை. ஆனால் சமீப காலத்தில் நடந்த சில நிகழ்வுகளால் எனக்குள் ஒரு பெரும் தயக்கம் வந்திருப்பதை இப்போது நான் உணர்கிறேன். சிலர் எதற்காக நம் வாழ்க்கைக்குள் வந்து எதற்காக ஒரு பிரளயத்தை ஏற்படுத்தி விட்டுச் செல்ல வேண்டும் என்ற கேள்வி என்னைத் துளைக்கிறது. சமீப காலமாக மனிதர்களிடம் கொஞ்சம் விலகியே இருக்க நினைக்கிறேன். இது எனக்கு ஒரு புதிய அனுபவமாக இருக்கிறது. இந்த மனநிலையை ஏற்றுக் கொள்வதில் எனக்கு விருப்பமில்லை. ஆனாலும் காயப்பட்டு விடுவோம் என்ற பயம். முரண்பாட்டுப் போராட்டம்.

எனக்கு மிகவும் சவாலான விஷயங்களில் பொய் சொல்வதும் ஒன்று. பொதுவாக நான் இந்தச் சமூகத்தில் எனக்கான அடையாளத்தைப் பற்றியோ இல்லை பிற மனிதர்கள் என்னைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றியோ அதிகம் சிந்திப்பதில்லை. அதனால் பொய் சொல்வது எனக்கு மிகவும் கடினமான ஒரு காரியம். நான் பொய்யே சொன்னதில்லை என்றெல்லாம் சொல்ல மாட்டேன். சிறிய பொய்கள் சொல்லி இருக்கிறேன். ஆனால் அதை இயல்பாக எடுத்துக் கொள்ளும் ஒரு மனப்போக்கு எனக்குக் கிடையாது. ஒருநாள் வேலைக்குச் செல்லாமல் இருக்க ஏதோ ஒரு பொய்யான விஷயத்தைச் சொல்லி விடுமுறை எடுத்தால் கூட அன்று முழுவதும் தூங்க மாட்டேன். அது ஒரு பெரிய குற்ற உணர்ச்சியாக இருக்கும். இன்று வேலைக்கு வரப் பிடிக்கவில்லை அதனால் வரவில்லை என்று சொல்வதில் எனக்கு என்ன தயக்கம், என்ன பயம் என்று தோன்றும். இது ஒரு சிறிய எடுத்துக்காட்டுதான். சில நேரம் சிலவற்றைத் தவிர்ப்பதற்காகச் சிறிய பொய்களைச் சொல்லும்போதும் என்னால் நிம்மதியாக இருக்க முடியாது. வேறு ஏதோ ஒரு கட்டத்தில் அவர்களிடம் அந்த உண்மையைச் சொல்லி விட வேண்டும் என்று மனம் துடிக்கும். நேர்மையாக இருப்பது வாழ்க்கையை மிகச் சுலபமாக வைக்கும் என்பதில் எனக்குப் பெரும் நம்பிக்கை. பெரும்பாலும் என் மனதில் தோன்றுவதைப் பிறரிடம் சொல்லி விடுவேன். சில நேரங்களில் இதே தன்மையை நான் நெருங்கிப் பழகும் சிலரிடமும் எதிர்பார்ப்பேன். இங்குதான் பிரச்சனையே உருவாகும்.

சில கேள்விகள் என்னைத் துளைத்துக் கொண்டே இருக்கும். அதற்கான நேர்மையான பதிலை ஏன் அவர்கள் சொல்வதில்லை என்ற கோபம் இருந்து கொண்டே இருக்கும். ஒரு காலகட்டத்தில் இதை நான் புரிந்து கொள்ள ஆரம்பித்தேன். என்னைப் போலவே மற்றவர்களும் சிந்திக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. நான் இங்குப் பார்க்கும் பெரும்பான்மையான மனிதர்களுக்கு அவர்கள் வாழும் சமுதாயத்தில் அல்லது உறவு, மற்றும் நட்பு வட்டங்களில் தங்களுக்கான அடையாளம் அல்லது மதிப்பீடு பற்றிய பெரிய கவலை இருக்கிறது. இது தவறு என்று நான் சொல்ல மாட்டேன். அது மனித இயல்பு தான். எனக்கும் ஓரளவு அது இருக்கிறது. ஒரு சமூக விலங்காக எனக்கான மதிப்பீட்டை நான் பற்றிக் கொள்ள வேண்டும் என்ற கடமை உணர்வு எனக்கும் இருக்கிறது. நான் எவ்வாறு பார்க்கப்படுகிறேன் என்ற சிந்தனையே எனக்குச் சுத்தமாக இல்லை என்று சொல்ல மாட்டேன். ஆனால் பெரும்பாலும் நான் அதைப் பற்றி யோசிப்பதில்லை என்றுதான் நினைக்கிறேன்.

ஆனால் மற்றவர்களுக்கு அந்த மதிப்பீடு மிகவும் முக்கியமானதாக இருக்கும் போது சில உண்மைகளை, தான் இப்படித்தான் என்ற நிதர்சனத்தை வெளிப்படையாக அவர்களால் சொல்ல முடிவதில்லை. சொல்ல வேண்டிய அவசியமும் கட்டாயமும் கூட அவர்களுக்கு இல்லை. ஆனால் இதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தாலும் சிலநேரங்களில் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. இதனால் பல கட்டங்களில் பல சூழ்நிலைகளில் நான் கூட்டத்திலிருந்து விலகிக்கொள்கிறேன். தனிமையாக உணர்கிறேன். உளரீதியாக எனக்கு இது ஒரு பெரும் சுமை தான். அதே நேரத்தில் ஒரு போலித்தனமான வாழ்க்கையும் என்னால் கண்டிப்பாக வாழ முடிவதில்லை. நம் அனைவருக்குமே இந்தப் பிரச்சனை வெவ்வேறு அளவு இருந்து கொண்டே தான் இருக்கிறது. அறிவுக்கும் மனதிற்கும் இடையிலான ஒரு போராட்டம். சில நேரங்களில் சில மனிதர்கள் பொய் சொல்கிறார்கள், போலித்தனமாக இருக்கிறார்கள் என்று அறிவிற்குத் தெளிவாகத் தெரியும், ஆனால் அதைக் காட்டிக் கொடுத்தோ அல்லது அவர்களின் சுயத்தைச் சமுதாயத்தில் வெளிப்படையாக உடைத்தோ அல்லது அவர்களிடமே அதைச் சொல்லிக் குறை கூறி எனது பண்பை அல்லது எனது நேர்மையை நிரூபித்துக் கொள்ளும் செயல்பாட்டை என்னால் செய்ய முடிவதில்லை.


(இங்கே சட்டத்திற்கு எதிரான விஷயங்களையோ, அல்லது ஒரு சமுதாயத்திற்கு ஆபத்தான விஷயங்களைச் செய்பவர்களைப் பற்றியோ நான் குறிப்பிடவில்லை. தனிப்பட்ட உறவு முறைகளிலும் அல்லது நட்பு வட்டாரத்திலும் இருக்கும் மன உணர்வுகளைப் பற்றி மட்டுமே இங்கு நான் பேசிக் கொண்டிருக்கிறேன்) ஆனால் எந்தவித ஜட்ஜ்மெண்ட்டும் இல்லாமல் அவர்களை ஏற்றுக் கொள்வதும் அல்லது அன்பு பாராட்டுவதும் என்னால் முடிவதில்லை.

அறிவின் குதர்க்கமான தன்மை வெளிப்பட்டுக் கொண்டேதான் இருக்கும். அதே நேரத்தில் அதை அமிழ்த்தி வைத்து நிதர்சனத்தின் தன்மையைப் புரிந்து கொள்ளும் முயற்சியில் மனம் ஈடுபட்டுக் கொண்டே இருக்கும். மனம் வெல்லும் பொழுதெல்லாம் நாம் ஏன் முட்டாளாக என்னைக் காண்பித்துக் கொள்ளத் தயங்குவதில்லை என்ற கேள்வி மனதிற்குள் எழும். சுயம் சுட்டெரிக்கும். என் அறிவு வெல்லும் பொழுது மனிதத் தன்மையைப் பற்றிய கேள்வி எழும். தத்துவார்த்த கேள்விகளுக்குள் மூழ்கித் தவிப்பேன். இப்படிக் கேள்விக்குள் கேள்வியாகத் தொடர்ந்து கொண்டே இருக்கிறது வாழ்க்கை. சில நேரங்களில் எதற்காக இந்த மனப்பக்குவத்தை நான் எதிர்பார்க்கிறேன் அல்லது கடைப்பிடிக்க வேண்டும் என்று நினைக்கிறேன் என்று எனக்கே தெரிவதில்லை. ஆனால் இப்படித்தான் என் மனம் இயங்குகிறது. ஒன்று அறிவின் போக்கின்படி ஒன்றை வெறுத்து வெளியே வந்து விட வேண்டும், இல்லை எந்தவித கேள்விகளும் இல்லாமல் எதிர்பார்ப்புகளும் இல்லாமல் ஒன்றை அரவணைத்துக் கொள்ள வேண்டும் இந்த இரண்டும் இல்லாமல் கேள்விக்கால் சிக்கித் தவிப்பது பெரும்பாடாகத்தான் இருக்கிறது.

பரிணாமத்தின் இயல்பு பக்குவமா என்ற கேள்வி. சிந்தனை, சொல், செயல் ஒன்றாகச் சங்கமிக்கும் ஒரு புள்ளி. அதைச் சுற்றிக் கட்டமைக்கப்பட்ட தார்மீக மதிப்புகள் இவை அனைத்தும உயிர் வாழ்தல் என்ற அறிவின் பரந்த வெளியில். இந்த வாழ்க்கை எவ்வளவு சுவாரசியமானது. எவ்வளவு நுணுக்கமானது. இதை உணர்வுப்பூர்வமாகப் புரிந்து கொள்ளும் பக்குவம்தான் இந்தப் பரிணாமமோ. இப்பக்குவம் வரும் காலத்தில் வரும் என்றே நினைக்கிறேன். எனக்கா அல்லது என் மூலம் அல்லது நம் மூலம் அடுத்தடுத்த உயிர்களுக்கா தெரியவில்லை. அதுவரை வாழத்தான் வேண்டும் கேள்விகளோடு.








யேர்மனியில் கற்றிங்கன் நகரில் ஆசிரியையாக பணிபுரியும் நற்குணம் உள்ள சைவ, வேளாள குல 30 வயது பெண்ணிற்கு ஏற்ற பட்டதாரி மணமகனை தற்போதைய பாடசாலையிலேயே கற்பிக்க கூடிய தூரத்தில் வரனை எதிர்பார்க்கும் பெற்றோர்.
தொடர்புகளுக்கு: 4915774318528

யேர்மனியில் Wirtschaftsingenieurin ஆக படிப்பை நிறைவு செய்த 35 வயது நற்குணமுள்ள சைவ வேளாள பெண்ணிற்கு பொருத்தமான பட்டதாரி மணமகனை யேர்மனியில் எதிர் பார்க்கும் பெற்றோர்
தொடர்புகளுக்கு: 4915774318528

MOBIL: 0091-9841026997 | Email: kbr0452@yhoo.co.in



# விமர்சனங்களின் வலிமை எதுவரை?



பொலிகையூர் ரேகா
(இங்கிலாந்து)

பரந்து விரிந்த உலகின் எல்லாவிடத்திலும் வாழ்கின்ற அனைத்து மனிதர்களும் ஏதோவொரு விதத்தில் தமக்கான விமர்சனங்களை எதிர்கொள்கின்றார்கள். ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட உணர்வுகளும் கருத்துகளும் இருக்கின்றன. ஒவ்வொருவரும் தம் கருத்துகளை நேரடியாகக் கூறும்போது அது சில நேரங்களில் ஏற்புடையதாக வோ் பல நேரங்களில் ஏற்க முடியாதனவாகவோ போய்விடுகின்றது.

விமர்சனங்களின் காரணமாகப் பிறரின் செயல்களும்,வார்த்தைகளும் சில நேரங்களில் இன்னொருவரைக் காயப்படுத்துவதாக அமைந்து அவர்களின் உள நிம்மதியையும் பறித்து விடுகின்றது.

விமர்சனங்களின் வலிமை என்பது நாம் அவற்றை எடுத்துக் கொள்வதைப் பொறுத்தே அமைகின்றது. புகழ்ச்சியின் உச்சமான விமர்சனம் என்றாலும் எதிர் மறையான விமர்சனம் என்றாலும் நாம் அவற்றை எவ்வாறு பார்க்கின்றோம் அவை எவ்வாறு எம்மை மாற்றத்திற்குள்ளாக்குகின்றது என்பதைப் பொறுத்தே  அதன் நோக்கம் முழுமையடைகின்றது.

நம்மைக் காயப்படுத்துவதற்கென்றே கூறப்படும் விமர்சனங்களுக்கு முன்னுரிமை கொடுக்காதவரை அவை மதிப்பற்றவை. அந்த விமர்சனங்கள் நம்மை எதுவுமே செய்துவிடாது.

யாரோவொருவர் கூறும் விமர்சனங்கள் நம் நிம்மதியைப் பாதிக்க நாம் அனுமதிப்போமானால் நமக்கான வாழ்வை நாம் வாழ முடியாமல் போய்விடும்.அடுத்தவர்களின் கருத்திற்கேற்பவே நம் வாழ்வை நாம் வடிவமைக்க நேர்ந்துவிடும்.

பிறரின் விமர்சனங்களை நாம் பார்க்கும் கண்ணோட்டத்தில்தான் அதன் நோக்கம் முழுமை பெறுவதும் நமது எதிர்கொள்ளும் திறன் வெற்றி பெறுவதும் தங்கியுள்ளது.

நீங்கள் யாரென்பதை நீங்கள் அறிந்திருக்கும்போது யாரோவொருவரின் விமர்சனம் உங்களை எதுவும் செய்துவிடப்போவதில்லை என்பதில் உறுதியாக இருங்கள். யாரோ சிலரின் கருத்துகளால் உங்களது அடையாளத்தை மாற்ற முடியுமானால் அந்த அடையாளத்தை உருவாக்கப் பயன்பட்ட உங்கள் உழைப்பையும் காலத்தையும் கணக்கில் கொண்டு அவர்கள் கருத்துகளைக் கடந்து செல்லப் பழகுங்கள். நீங்களாக உடைந்து போகாதவரை உங்களை யாராலுமே உடைக்கவே முடியாது. உங்களை உடைப்பதற்கான பிறர் முயற்சிகளில் வெற்றி பெறுவது நீங்களாகவே இருக்க வேண்டுமெனப் பயணியுங்கள்.

கடலில் மிதக்கும் கப்பலானது தண்ணீரை வெளியே வைத்து அதன் மேல் மிதப்பது போன்றே உங்கள் அணுகுமுறையும் இருத்தல் வேண்டும். இல்லையேல் கப்பலின் உள்ளே செல்லும் நீர் எப்படி அந்தக் கப்பலை மூழ்கடித்துவிடுகிறதோ அதுபோன்றே நீங்கள் அனுமதிக்கும் விமர்சனங்களும் உங்களை மூழ்கடித்துவிடும்.

உங்களை மனதளவில் உடைத்துவிட முயலும்போதெல்லாம் அவர்கள் தொடமுடியாத தூரத்தில் உங்கள் எண்ணங்களையும் செயல்களையும் வைத்திருக்கத் தொடங்குங்கள். எந்த விமர்சனங்களும் உங்களை எதிர்மறை வழியில் மாற்றுவதில்லை என்பதில் உறுதியாக இருங்கள்.

யாரோவொருவரின் விமர்சனங்களால் உங்கள் வாழ்வில் என்ன நேர்ந்துவிடக்கூடும் என்பதைச் சிந்தியுங்கள். அந்த விமர்சனங்களை நம்பும் மற்றவர்களால் உங்களுக்கு என்ன ஆகிவிடப்போகின்றது என்பதை விடவும் அந்த விமர்சனங்களைக் கண்டு உடைந்துபோகும் உங்களால் உங்கள் வளர்ச்சிக்கும், நிம்மதிக்கும் என்ன ஆகிவிடும் என்பது குறித்துச் சிந்தியுங்கள்.

நீங்கள் உருவாக்கிய அடையாளத்தை எதுவுமே உடைத்துவிடாது என்று நீங்களே நம்பும் தருணத்தில்தான் அந்த விமர்சனங்களின் நோக்கம் உடைந்து உங்கள் காலடியில் வீழ்ந்துபோகும்.



நா.முத்துக்குமார்

# நெஞ்சைத் தொடும் கவிதைகள்

வாய்க்காலில்
உள்ள எறும்புகள்
வீடு போய்ச் சேரட்டும்
பம்பு செட்டை நிறுத்துங்கள்.

இங்கு
பெரும்பாலும்
கல்யாணத்தை
மட்டுமல்ல...
கல்யாணத்தில் கலந்து
கொள்வதைக்கூட
நகைகளே
தீர்மானிக்கின்றன.

மரணம் என்பது
கருப்பு ஆடு,
பல சமயங்களில்
நமக்குப் பிடித்தமான
ரோஜாக்களை
தின்றுவிடுகிறது..!







03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

# நிச்சயமற்ற தேர்தல் கள நிலையில் தமிழ்ப் பொது வேட்பாளர் வருகை!



இரண்டாவது விருப்பு வாக்கு கணிப்பிடப்படும். இதற்கு முன்னர் இவ்வாறான ஒரு நிலை ஏற்படவில்லை. இம்முறை இரண்டாவது விருப்பு வாக்கு எண்ணப்படும் ஒரு நிலை ஏற்படலாம்.

களம் நான்கு முனைப் போட்டியாக மாறியிருப்பதால், தமிழ் மக்களுடைய வாக்குகளின் பெறுமதி அதிகரித்திருக்கின்றது. அதாவது, தீர்மானிக்கும் சக்தியாக தமிழ் வாக்குகள் அமையப்போகின்றது. ஏதோ ஒரு வகையில் தமிழ் வாக்குகள் தமக்குக் கிடைப்பதற்கு வழிவகுத்தால் தமது வெற்றியை ஓரளவுக்காவது உறுதிப்படுத்தலாம் என்று ரணிலும், சஜித்தும் திட்டமிட்டுச் செயற்படுகின்றார்கள். ஆனால், தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயம்தான் அவர்களுக்கு இப்போது வந்திருக்கும் பிரதான சவால்!

பொது வேட்பாளராக பா.அரியநேத்திரன் போட்டியிடுவார் என்று தமிழ்ப் பொதுச் சபையால் வெளியிடப்பட்ட அறிவிப்பு, ரணிலுக்கும் சஜித்துக்கும் நிச்சயமாக அதிர்ச்சியைக் கொடுத்திருந்தது. உடனடியாகவே பேச்சுவார்த்தைக்கு வருமாறு தமிழ்ப் பொதுச் சபையின் 14 பிரதிநிதிகளுக்கும் இருவருமே போட்டி போட்டு அழைப்பு விடுத்தார்கள். பொது வேட்பாளர் களமிறங்குவது தமிழ் மக்களுடைய வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்கு தாம் வகுத்திருந்த உபாயங்களை சீர்குலைத்துவிடும் என்பதுதான் அவர்களுடைய அச்சம். அந்த அச்சம் நியாயமானதுதான்.

பொது வேட்பாளரைத் தெரிவு செய்து களமிறக்கிய தமிழ்ப் பொதுச் சபையில் ஏழு தமிழ்த் தேசியக் கட்சிகளும், 80 வரையிலான சிவில் சமூக அமைப்புக்களும் உள்ளன. இதனைவிட, பிரதான தமிழ்க் கட்சியான தமிழரசுக் கட்சி, இதுவரையில் தீர்மானம் எதனையும் எடுக்காத போதிலும் அதிலுள்ள பெரும்பாலானவர்கள் பொது வேட்பாளர் என்ற கருத்தை ஆதரிக்கின்றார்கள்.

இந்த நிலையில் பொது வேட்பாளரை களமிறக்கியவர்களுடன் பேசி அவர்களை வழிக்குக் கொண்டுவர முடியுமா, என்பதைப் பார்ப்பதுதான் ரணிலினதும், சஜித்தினதும் திட்டமாக இருந்தது. அநுரவைப் பொறுத்தவரையில் அவர் தமிழர்களுக்கு வாக்குக் கொடுப்பது, தனக்கு இருக்கும் சிங்கள வாக்குளை பாதிக்கும் என்று அஞ்சுகின்றார். அதனால், தமிழர்களுடன் பேரத்துக்கு வருவதில் அதிகளவுக்கு அக்கறையற்ற ஒருவராகத்தான் அவர் இருக்கின்றார்.

தமிழ்ப் பொதுச் சபையில் உள்ள அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மட்டும் போது இருவருக்குமே அவர்கள் விளக்கினார்கள். இணைந்த வடக்கு, கிழக்கில் சமஷ்டிதான் தமது கோரிக்கை என்பதையும் அவர்கள் வலியுறுத்தினார்கள். ஜனாதிபதி வேட்பாளர்களால் வழங்கப்படும் வாக்குறுதிகள் எதுவுமே கடந்த காலங்களில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட விரக்தியையும் அவர்கள் விளக்கினார்கள்.



தான் ஜனாதிபதியையும், எதிர்க்கட்சித் தலைவரையும் சந்தித்தார்கள். சிவில் சமூகப் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை. சந்திப்புக்கான நிகழ்ச்சி நிரல் தரப்படாமையாலும், போதிய கால அவகாசம் இருக்காமையாலும் இந்தப் பேச்சுக்களில் தாம் பங்கேற்கவில்லை என்று சிவில் சமூகப் பிரதிநிதிகள் தெரிவித்திருந்தார்கள். நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் இவ்வாறான சந்திப்பு ஒன்றுக்கு தாம் தயாராக இருப்பதாகவும் அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

ரெலோ, புளொட், ஜனநாயகப் போராளிகள் கட்சி என்பனதான் இந்தப் பேச்சுக்களில் பங்கேற்றன. பொது வேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவதற்கு தாம் எடுத்த தீர்மானத்துக்கான காரணம் என்ன என்பதை இதன்

சமஷ்டியைத் தருவது என்பது பிரச்சினையல்ல என்று தெரிவித்த ரணில், பலமான ஒரு நாடாளுமன்றம் அமைந்தால் அதனைத் தர தான் தயாராக இருப்பதாகக் கூறியிருக்கின்றார். ஆனால், பிரதான கட்சிகள் அனைத்துமே உடைந்து சின்னாபின்னமாகிப் போயிருப்பதால், எதிர்காலத்தில் பலமான நாடாளுமன்றம் ஒன்று உருவாகுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை. இரண்டரை வருடகாலமாக நிறைவேற்று அதிகாரங்களுடன் ஜனாதிபதியாக இருப்பவர் மீண்டும், ஜனாதிபதியாக வந்து, பலமான நாடாளுமன்றமும் தமக்கு அமைந்தால் சமஷ்டியைத் தருவேன் என்று சொல்வதை எப்படி நம்புவது?

அதேபோலத்தான் சஜித் பிரேமதாசவும். 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு தான் அதிகாரத்துக்கு வந்தால் நடவடிக்கை எடுப்பேன் என்று கூறியிருக்கின்றார். அதேவேளையில், தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது அவர்களுடைய உரிமை என்று சொன்ன சஜித், ஆனால், இவ்வாறு இன ரீதியாக அரசியல் செய்வது இன, மத முரண்பாடுகளை மேலோங்கச் செய்யும் என்றும் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

நாடு முழுவதும் ஆயிரம் விகாரைகளைக் கட்டுவதற்கான திட்டத்தை வகுத்துச் செயற்பட்டவரும் சஜித்தான். இதேபோல, 13 ஆவது திருத்தம் குறித்து ரணில் பேசிய போது, கொந்தளித்த பிக்குகளை கட்டுப்படுத்தாமல் பார்த்துக் கொண்டிருந்தவரும் அவர்தான். சிங்கள வாக்குகளுக்காக முன்னாள் இராணுவ அதிகாரிகள் பலரையும் தனது கட்சியில் இணைத்துக்கொண்ட சஜித், பொறுப்புக் கூறல் போன்ற விடயங்களில் எவ்வாறு செயற்படுவார் என்பது எதிர்பார்க்கக்கூடியதுதான்.

தமிழரசுக் கட்சியின் “சிலரை“ பயன்படுத்தி தமது பேரங்களை முன்னெடுத்து தமிழ் வாக்குகளை உறுதிப்படுத்தலாம் என்று ரணிலும், சஜித்தும் போட்ட கணக்கு தமிழ்ப் பொது வேட்பாளர் களமிறக்கப்பட்டதால் சிதறடிக்கப்படப் போகின்றதா என்பதுதான் இப்போது அவர்களுக்குள்ள பிரச்சினை. வெற்று வாக்குறுதிகளால் இந்த நிலையைச் சமாளிக்க அவர்கள் எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை.

அதேவேளையில் வழமையாக தரப்படுகின்ற வாக்குறுதிகளை நம்பி ஏமாந்தவரலாறு இனியும்தொடரக்கூடாது என்ற நிலையில்தான் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்க வேண்டும் என்ற கருத்தும் மேலோங்கியது! அது இன்று சாத்தியமாகியும் இருக்கின்றது.

தமிழ்ப் பொது வேட்பாளர் தேர்தல் களத்தில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தப்போகின்றார் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். தமிழர் அரசியலில் இது மற்றொரு திருப்பு முனையாக அமையுமா என்ற கேள்விக்கும் இன்னும் மூன்று வாரங்களில் – அதாவது செப்ரெம்பர் 21 இல் பதில் கிடைத்துவிடும்.



# பெருந்தன்மை என்பதா? ராஜதந்திரம் என்பதா?

பரணி ஸ்டூடியோவில் படப்பிடிப்பு நடந்து.கொண்டிருந்தபோது, ஒரு காட்சி முடிந்து, அடுத்த காட்சிக் காக லைட் அட்ஜெஸ்ட்மண்ட் நடந்து கொண்டிருந்தது. நானும் சிவாஜியும் எதிரெதிரே உட்கார்ந்து, பேசிக் கொண் டிருந்தோம். ஸ்டுடியோவில் நுழை வாயிலை நோக்கியபடி உட்கார்ந்திரு ந்த எனக்கு திடீரென்று ஒரு அதிர்ச்சி. கேட்டை திறந்து கொண்டு திமுதிமு வென ஐம்பது,அறுபது இளைஞர்கள் உள்ளே நுழைந்து எங்களை நோக்கி வந்து கொண்டிருந்தனர்



அடுத்தாற்போல் அந்த கூட்டத்துடன் வந்துகொண்டிருந்த மனிதரைப் பார் த்தவுடன் மேலும் அதிர்ச்சி.“அண்ணே திரும்பிப் பாருங்க. எம்.ஜி.ஆர். ஐம்பது அறுபது பேரோட வந்துகிட்டு இருக்காரு“ என்றேன். திரும்பிப் பார்த்த சிவாஜிக்கும் எம்.ஜி.ஆர். ஏன் இப்போது, இத்தனை பேருடன் இங்கே வருகிறார் என்று புரியவில்லை. இதற்குள் எம்.ஜி.ஆர் எங்களை நெருங்கிவிட்டார். “அண்ணே வாங்க வாங்க– எங்க இவ்வளவு தூரம்?“ என்றார் சிவாஜி. தம்முடன் வந்த இளைஞர்களைக் காட்டி “இவங்களெ ல்லாம் உங்க ரசிகர்களாம். காலையில் ஸ்டூடியோவைத் தாண்டிப் போகிறபோது, இவங்களெல்லாம் ஸ்டூடியோவுக்கு வெளியில் நிற்கறதைப் பார்த்தேன். இப்போ திரும்பிப் போகிறபோதும் பார் த்தேன். வெளியிலேயே நின்னுகிட்டு இருந்தாங்க. அதான் உங்களை சந் திக்கட்டுமேன்னு உள்ளே கூட்டிக்கிட்டு வந்தேன். நான் வரட்டுமா?“ என்று கூறி விடைபெற்றார். அந்த ரசிகர்கள் புறப்பட்டு போனபின் சிவாஜி தமாஷாய், “என்னோட இந்த ரசிகர்களில் பாதிபேர் எம்.ஜி.ஆர் ரசிகரா இன்றில் இருந்து மாறிடுவாங்க“ என்றார்.

சிவாஜி ரசிகர்கள் என்று தெரிந் தும்,சிவாஜியை அவர்கள் சந்திப்ப தற்கு ஏற்பாடு செய்ததை எம்.ஜி.ஆரின் பெருந்தன்மை என்பதா? ராஜதந் திரம் என்பதா? – இயக்குநர் ஸ்ரீதரின் ‘திரும்பிப் பார்க்கிறேன் ‘ நூலிலிருந்து.

21 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## இந்த உலகம் வேண்டாம்

தந்தால், நாம் ஏன் இவ்வாறான தொழிலுக்குப் போகப் போகின்றோம் என்று பணத்தாசையில் அரசாங்கத்தைக் குற்றம் சுமத்துகின்றார்கள் சுயநலவா திகள். ஹெரோயினை முதன் முதலா கத் தயாரித்த ஜெர்மனி பயேன்(Bayer) மருந்து உற்பத்தி நிறுவனம் “நாம் மருந் தாகவே பயன்படுத்துவதற்காகத் தயாரி த்தோம்“ என்று சொல்லித் தப்பிக் கொள் கின்றார்கள். போதைக்கு அடிமையா னவர்களுக்கு மருத்துவரே மருந்துக் கடைகளில் வாங்குவதற்கு மருந்துச் சீட்டு எழுதிக் கொடுக்கின்றார்கள். “நாம் கொடுக்கவில்லையென்றால், அவர்கள் வீதியில் கிடக்கும் ஊசியை எடுத்துப் பயன்படுத்துவார்கள். அது அவர்களின் உடல்நலத்தை மீதமாகப் பாதிக்கும். எயிட்ஸ் போன்ற நோய்கள் வருவதற் குரிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றது“ என்கின்றார்கள். இவ்வாறான நோயால் துன்புறுவதைவிட இறப்பது மேல் என்று தான் எண்ணத் தோன்றுகின்றது.

மனிதனுக்குப் போதையேற்றல் என்பது இன்று நேற்றல்ல பண்டைக்கா லம் தொட்டே இருந்து வந்துள்ளதை அறியமுடிகின்றது. அபின், கஞ்சா, கள்ளு, சாராயம், பீடி, சிகரட், சுருட்டு இவற்றுக்கு மனிதன் அடிமையாகி இருந்தது அறியப்பட்டதே.

**மீன் தடிந்து விடக்கு அறுத்து**
**ஊன் பொரிக்கும் ஒலி முன்றில்**
**மணல் குவை மலர் சிதறிப்**
**பலர் புகு மனைப் பலிப் புதவின்**
**நறவு தொடைக் கொடியோடு**

என்னும் பட்டினப்பாலை காவிரிபூம் பட்டினத்தில், கடற்கரையில் கள்ளுக்க டைகள் பிற கடைகளைப் போன்றே அடை யாளக் கொடிகளோடு இருந்தமையை எடுத்துஉரைக்கின்றது. இவ்வாறான அத்து மீறிய போதையால் சீரழியும் உலகுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வள்ளுவர் எழுத் தாணி எடுத்தார்.



ஆனால், அவருடைய ஒரு குறளிலே கள் உண்பவனைக் காரணம் காட்டித் திருத்த முயலுதல் தண்ணீருக்குள் மூழ்கிய வனைத் தீப்பந்தம் கொண்டு தேடுவதைப் போலாகும் என்கிறார்.

**களித்தானைக் காரணம்**
**காட்டுதல் கீழ்நீர்க்**
**குளித்தானைத் தீத்துரீ அற்று**

அப்படியானால், கள் உண்பவனைத் திருத்த முயற்சி எடுத்தல் கூடாதா? என்ற கேள்வி எழுகின்றது. எத்தனை–யோ உளவியல் நிபுணர்கள் தம் முடைய பட்டப்படிப்பை முடித்துள்ளார்கள். தம்முடைய மருத்துவமனைக்கு வருகி ன்ற பணப்பசையுள்ளவர்களை விட்டு, வீதியைத் தங்குமிட வாசஸ்தலமாகக் கொண்டு, இறுதி ஊசிக்காகத் தவம் கிடப்பவர்களை நாடிச் செல்லக் கூடாதா? பாவப்பட்ட ஜென்மங்களாக அநாதரவாகக் கிடப்பவர்களின் பக்கம் செல்லக் கூடாதா?

கிட்டப் போனால், ஒட்டிக் கொள்ளும் என்பதுபோல இவ்வாறானவர்களை வெறுப்பவர்களே அதிகம். அருகே சென்று ஆறுதலாகப் பேசுவதற்கு எம்மவர்கள் தயங்குவார்கள். மனத்தளவில் பாதிக்க ப்பட்டு, உடலளவில் தளர்ந்து போய், நடப் பதற்கே வலுவிழந்து இருப்பவர்களைக் கண்டு அஞ்ச வேண்டிய அவசி யம் இல்லை. அருகே வருபவர்களை துன்புறுத்துவார்களைப் போதையால் பாதிக்கப்பட்டவர்கள் துன்புறுத்துவார்கள் என்று சொல்ல முடியாது. இந்த நிலை அவர்களுக்கு எல்லாம் கடந்த ஒரு ஆனந்த நிலை என்றே கூறமுடியும். இதற்கு வழி காண வேண்டிய அவசியம் ஒவ்வொருவருக்கும் இருக்கின்றது.

09 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## அன்றங்கே ஒரு....

டீல் ஓகே தானே “ என்று. பாம்புக்கு எங்களை கடிச்சு தன்னை தாழ் த்த விருப்பமில்லையோ அல்லது எங்களை ப்பார்த்தே பைத்தியம் வந்திட்டுதோ என்ன வோ அன்று யாரையும் கொத்த வில்லை.

பொம்பர் சன்னதமாடி முடித்து திரும்பி வருவதற்குள் அவசரமாக வீடுகளுக்கு வந்து விட்டோம். வீடுகளுக்கு வந்த பின் தான் இழப்புக்கள் பற்றிய செய்திகள் அறியலாம். இழப்புக்களே வாழ்வாகிப் போன இனத்துக்கு அதுவொன்றும் அவசரச் செய்தி அல்லவே. அதனால நாங்களும் உடன் அது பற்றி ஆராய்வ தில்லை. வாழும் கடைசிக் கணம் வரை நடப்பவற்றை ரசித்துக் கொண்டே கடக்க வேண்டும் என்பது மட்டுமே அப்போது மனதில் இருந்திருக்க வேண்டும் என நினைக்கிறேன்.

அன்று காலடியிலும் தலைக்கு மேலும் மரணம் காத்திருக்க உயிர்வாழ்தல் அந் தரத்தில் தொங்கிய நேரத்திலும் சிரித்துக் கொண்டிருந்தோமெனில் அதற்கு ஒரே காரணம் மனதுக்கு நெருக்கமானவர்கள் அருகாமையில் அல்லது அவர்களோடு சந்திப்பது மரணம் எனினும் கூட இறுதி நிமிடத்திலும்வாழ்க்கை வாழப்பட்டுக் கொண்டிருக்க உதடுகளில் புன்னகையே உறைந்திருக்கும்.

(உங்களை நினைவு கூர்வதற்காய் ஒரு தினம் எனில் எல்லா நாட்களும் எனக்கு நண்பர்கள் தினமே)







## பாலியல் வன்கொடுமை நிகழ்ந்தேறும் பல சந்தர்ப்பங்களிலும் நம் சமூகம்

# 'அவள் ஆடை சரியில்லை', 'சென்ற இடம் சரியில்லை' எனப் பெண்கள் மீதே குற்றங்களைச் சுமத்தியிருக்கிறது!

இந்த உலகமும் நம்முடைய சமூகமும் எவ்வளவோ முன்னேறிவிட்டதாக நாமெல்லாம் வியந்து மார்தட்டிக்கொண்டிருக்கும் தற்போதைய காலகட்டத்தில்தான், பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் எதிரான குற்றச்செயல்கள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன என்கிற புள்ளிவிபரங்கள் நம் ஒவ்வொருவர் தலையிலும் சம்மட்டியால் ஓங்கி அடித்துக் கொண்டிருக்கின்றது என்றால் மிகையில்லை. ஆம் , மனைவியாக இருந்தாலும் அவளது அனுமதியின்றி உறவு கொள்ள முயல்வது குற்றம் என்கிற அளவு "Marital Rape " பற்றிய விவாதங்கள் நடந்துகொண்டிருக்கும் நாகரிகமடைந்த சமூகத்தில், தினந்தோறும் தொடர்ந்து நடக்கும் பாலியல் வன்முறைகள், அதனோடு தொடர்புடைய கொடூர கொலைகள் பெரும் கவலையையும்,பதற்றத்தையும் உண்டாக்கிக் கொண்டிருக்கிறது என்பதுதான் உண்மை.

"பாலியல் வன்கொடுமைகள்" எல்லாக் காலங்களிலும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனாலும் இன்று அதிகளவில் அவை குறித்த செய்திகள் தெரியவருகின்றன என்பதும், ஊடகங்களின் வளர்ச்சிப் போக்கினால் பாலியல் வன் கொடுமைகள் செய்திகளாக்கப் படுவதாலும், மக்கள் முன்பைவிட தற்போது, இது பற்றித் தயங்காமல் வெளியில் சொல்வதாலும், இவ்வாறான விடயங்கள் பற்றி நாம் அதிகம் அறிந்துகொள்ள நேர்கிறது என்றாலும் கூட,சமீப காலமாக இந்த வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்திருக்கின்றன என்பது நிச்சயம் மறுப்பதற்கில்லை. மாறிவரும் பெண்களின் வாழ்வியலில் அவர்களுடைய வெளி, வீட்டிற்கு அதாவது குடும்பத்திற்கு வெளியே பெரியளவில் விரிவடையத் தொடங்கியிருக்கின்றது. பெண்களுக்கான அந்த வெளியில், அறிமுகமில்லாத மனிதர்களைச் சந்திக்க வேண்டிய சூழல் அவளுக்கு உருவாகிறது. இப்படிவெளியே வரும் பெண்களை காலங்காலமாக " பெண் தனக்கு உடமையானவள் " என்பது போன்ற மனோபாவம் கொண்ட சில



சைக்கோத்தனமான ஆண்களால் அவள் பாலியல் ரீதியாக சீண்டப்படுகிறாள். குடும்பம் என்கிற அமைப்பிற்குள், உறவினர்களால் பெண்கள் பாலியல் வன்கொடுமைகளுக்கு உள்ளாவதும் காலங்காலமாக நடந்து கொண்டிருப்பதுதான். ஆனாலும் பெரும்பாலும் அதைப்பற்றிய செய்திகள் வெளியே வருவதில்லை என்பதும் கவலைக்குரிய விடயம்தான் .

பாடசாலைஉற்படபல்வேறுகல்விநிலையங்கள், பணியிடங்கள், பயணங்கள், வீடுகள் , வழிபாட்டுத் தலங்கள் என அனைத்து இடங்களிலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நடந்து கொண்டேதான் வருகின்றன. இதில் சிலபல குற்றச் சம்பவங்களே ஊடகங்களில் வெளிவந்த நிலையில், இன்னும் எத்தனையோ சம்பவங்கள் மறைக்கப்பட்டோ அல்லது வெளியுலகிற்கு கொண்டுவரப்படாமலோ இருப்பதுதான் யதார்த்த நிலை. ஒவ்வொரு குற்றச்செயல்களும் நடந்தேறும் போது அது மக்கள் மத்தியில் மிகப்பெரிய உணர்ச்சிரீதியான கொந்தளிப்புக்களை ஏற்படுத்தி மிகப்பெரிய போராட்டங்களுக்கும் எழுச்சிகளும் வழிவகுத்தாலும், மிகக்குறுகிய காலகட்டத்திலேயே குறிப்பிட்ட கோர சம்பவங்களை மறந்து, பத்தோடுபதினொன்றாக அதைநாமெல்லாம் கடந்துபோய்க்கொண்டிருக்கின்றோம் என்பதுதான் வேதனைக்குறிய விடயம்.



பிரியா இராமநாதன்
(இலங்கை)

பாலியல் வன்கொடுமை நிகழ்ந்தேறும் பல சந்தர்ப்பங்களிலும் நம் சமூகம் , "அவள் ஆடை சரியில்லை", "சென்ற இடம் சரியில்லை" என்று பாதிக்கப்படும் பெண்கள் மீதே குற்றங்களைச் சுமத்தியிருக்கிறது என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும்.இங்கே உடலளவிலும் மனதிலும் வன்முறைக்கு உள்ளாக்கப்படும் பெண்கள் அவமானங்களையும் சேர்த்துச் சுமக்க வேண்டியிருக்கிறது. இந்த நிலை மாறவேண்டும். பாலியல் வன்முறை செய்தவனை குற்றவாளியாகவும், பாதிக்கப்பட்ட பெண்ணை கருணையுடன் அனுசரணையாக அணுகும் மனப்பான்மையை நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும். அப்படி நிகழ்ந்தால் மட்டுமே, பாதிக்கப்பட்ட பெண் தனக்கு இழைக்கப்பட்ட வன்முறைக்கு நீதி கேட்டுப் பெறமுடியும் என்பதுடன் அவள் அவளது பெரும் துயரிலிருந்து மீண்டு, உடலாலும் உளத்தாலும் மீண்டும் வலுப்பெற முடியும்.

குழந்தைகள் வன்கொடுமைக்கு ஆளான நிலையில் பெற்றோர்களிடம் சொல்லாத நிலையில் அவர்களுக்கான பாதிப்பு இன்னும் அதிகமாகவே இருக்கும். குறிப்பாக பெற்றோர்களிடம் நல்ல உறவில் இருந்தாலும் சில குழந்தைகள் ஏதோவொரு அச்சத்தின் காரணமாக அதை பகிர்வதில்லை. இது மிகப் பெரிய தவறு என்பதால் அவசியம் நாம் நம் குழந்தைகளிடம் இது பற்றிய கலந்துரையாடல்களை மேற்கொள்வது காலத்தின் கட்டாயமாகும். சிறுவயது முதலே பெண்களுக்கு தங்கள் மீதான வன்முறையை எதிர்ப்பதற்கு அவசியமான அறிவை வழங்க வேண்டும். இதுபோன்ற எதிர்பாரா ஆபத்துகளைத் தவிர்ப்பது எப்படி, ஆபத்துக் காலங்களில் தற்காத்துக் கொள்வது எப்படி, ஏதேனும் நிகழ்ந்து விட்டால் தைரியமாக எதிர்கொள்வது எப்படி என அவர்களைத் தயார்படுத்துவது அவசியம் .

பாலியல்ரீதியான குற்றங்கள் நிகழ்ந்தால் அதை அவமானமாக கருதும் மனநிலை நம் சமூகத்தில் இன்னுமே இருக்கின்றது. இவ்வாறான மனோநிலை அநீதிக்குள்ளாக்கப்பட்ட குழந்தைகளையும் பெண்களையும் தாழ்வு மனப்பான்மை அல்லது குற்றவுணர்வு கொண்டவர்களாக மாற்றிவிடுகின்றது. குற்றத்தை புகார் செய்வதை அவமானமாக பார்க்கக்கூடாது. அதை குழந்தை பருவத்திலிருந்தே நாம் கற்றுக் கொடுத்துவிடவேண்டும். குற்றத்தை புகார் செய்வதுதான் குற்றத்தை தடுப்பதற்கான வழிஎன்பதைநாம் அனைவருமேமுதலில் மனதில் நிறுத்திக்கொள்ளவேண்டும்.

இதில் இன்னுமோர் கசப்பான விடயம் என்னவென்றால், இவ்வாறான பாலியல் வன்கொடுமைகள் பெண் குழந்தைகளுக்கு மட்டுமே நடப்பதில்லை என்பதுதான்! தற்போது வெளிவந்து கொண்டிருக்கும் திடுக்கிடும் தகவல்களைப் பார்த்தால், ஆண் குழந்தைகளுக்கும் உடல் எல்லையையும், பாதுகாப்பையும் கற்றுத் தர வேண்டிய தேவை நம்மிடத்தே இருப்பதை உணர்த்துகின்றது. இந்த சமூகச் சீரழிவை, சட்டத்தின் துணைகொண்டு மட்டும் மாற்றியமைக்க முடியாது. காரணம், அந்தச் சட்டத்தை ஏந்தியிருப்பவர்கள் தான் இந்தச் சீரழிவை விதைத்தவர்கள். இந்தச் சூழலிலிருந்து தனியாக யாரும் பாதுகாப்பு தேடவும் முடியாது.குறிப்பிட்ட சமூகச் சூழல்தான் தனிநபர் பண்பாட்டை சீரழித்தது என்றாலும், தனிநபர்களாக அதனை மாற்றிக் கொள்ள இயலாது. குற்றவாளிகளுக்கு தண்டனை கிடைக்கும் என்கிற நம்பிக்கை பெற்றோர்களுக்கும் பாதிக்கப்பட்ட பெண்களுக்கும் வருகின்றபோது நிச்சயம் குற்றங்களை பதிவு செய்ய அனைவருமே முன்வருவார்கள் என்பதும் கண்கூடு. ■




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.


Producer Balachandran Nagalingam
Co Producer Thangarajah Somasundaram
Cinematography S.Sivakumaran | Luxman| S.S.Priyan
Mastering & Dubbing Bhaarrath Sivanesan | Dubbing Star Sri
Songs Musicdirectors Prabalini Prabakaran | Prasanth Krishnapillai| R.Win Prasath
Lyrics Thayanithy Thambiah | Pottuvil Asmin | Sanjai Siva
War Song Choreography Pragash Rajah
SS Homemade Production
presents
சிபோ சிவகுமாரனின்
நாளைய மாற்றம்
GERMANY RELEASE
FROM
SEPTEMBER 01ST
@ Bochum | 01.09.2024
@ Heilbron | 22.09.2024
@ Frankfurt | 29.09.2024
@ Berlin | 06.10.2024
@ Stuttgart | 03.11.2024
@ Bielefeld | 10.11.2024
MEDIA SUPPORT
வெற்றிமணி
தமிழ் ரைம்ஸ்
TAMIL TIMES
STS தமிழ் TV
ETR
அகரம்

# திருப்பதி லட்டு; எம்.ஜி.ஆருக்கு மட்டும் தராத அடிமைப் பெண் நடிகை




நடிகர், தயாரிப்பாளர், இயக்குனர் என சினிமாவில் பன்முக திறமை கொண்ட எம்.ஜி.ஆர், அரசியலில், முதலில் திராவிட முன்னேற்ற கழகத்தில் இருந்தார். கடவுள் மறுப்பு கொள்கை கொண்ட இந்த கட்சியில் இருந்துகொண்டு, மூகம்பிக்கை கோவிலுக்கு சென்றது, மருதமலை கோவிரலுக்கு சென்றது என எம்.ஜி.ஆர் கட்சியில் சில சலசலப்புகளை சந்தித்திருந்தாலும், படப்பிடிப்பில் சக நடிகையின் மூலம் ஒரு சம்பவத்தை எதிர்கொண்டுள்ளார்.

பல தடைகளை கடந்து தமிழ் சினிமாவில் ஒரு ஹீரோவாக தன்னை நிலை நிறுத்திக்கொண்ட எம்.ஜி.ஆர், இயக்குனராகவும் தயாரிப்பாளராகவும் தனக்கென தனி முத்திரையை பதித்துள்ளார். முதன் படமாக எம்.ஜி.ஆர் இயக்கி தயாரித்த நாடோடி மன்னன் படம் படம் அவருக்கு பெரிய வெற்றியை கொடுத்த நிலையில், அடுத்தடுத்து பல வெற்றிகளை கொடுத்த எம்.ஜி.ஆர், தனது படங்கள் தொடர்பான முடிவை தானே எடுக்கும் நிலைக்கு உயர்ந்தார்.

இதனிடையே அடிமைப்பெண் திரைப்படத்தின் ஷ"ட்டிங் நடந்தபோது, அந்த படத்தில் நடித்த நடிகை ராஜஸ்ரீ திருப்பதிவுக்கு சென்று சாமி தரிசனம் செய்துள்ளார். அதன்பிறகு மீண்டும் படப்பிடிப்புக்கு வந்த அவர், யூனிட்டில் இருந்த அனைவருக்கும் லட்டு கொடுத்துள்ளார். ஆனால் அவர் எம்.ஜி.ஆருக்கு மட்டும் லட்டு கொடுக்கவில்லை. இதை கவனித்த எம்.ஜி.ஆர், ராஜஸ்ரீயிடம் எனக்கு ஏன் லட்டு கொடுக்கவில்லை என்று கேட்டுள்ளார்.

இதை கேட்ட ராஜஸ்ரீ இது கோவில் பிரசாதம், உங்களுக்கு கடவுள் நம்பிக்கை உள்ளதா? லட்டு கொடுத்தால் சாப்பிடுவீர்களா? என்று எனக்கு தெரியாது அதனால் தான் தரவில்லை என்று சொல்ல, எனக்கு பக்தி இல்லை என்று யார் சொன்னது என்று கூறிய எம்.ஜி.ஆர் உரிமையுடன் அவரிடம் இருந்து லட்டை வாங்கி சாப்பிட்டுள்ளார்.

# தனுஷுடன் கீர்த்தி சனோன்



தனுஷ் இயக்கி நடித்த 'ராயன்', கடந்த மாதம் 26 ஆம் திகதி வெளியானது. அடுத்து பான் இந்தியா படமான 'குபேரா' வில் நடித்து வருகிறார். சேகர் கம்முலா இயக்கும் இதில் அவர் ஜோடியாக ராஷ்மிகா மந்தனா நடிக்கிறார்.

இதற்கிடையே 'நிலவுக்கு என் மேல் என்னடி கோபம்' படத்தை இயக்கும் தனுஷ், அடுத்து ஆனந்த் எல்.ராய் இயக்கும் 'தேரே இஸ்க் மே' (Tere Ishk Mein) என்ற இந்திப் படத்தில் நடிக்க இருக்கிறார். இந்தப் படத்துக்கு ஏ.ஆர். ரஹ்மான் இசை அமைக்கிறார். இதில் தனுஷ் ஜோடியாக, இந்தி நடிகை கீர்த்தி சனோன் நடிக்க இருப்பதாகக் கூறப்படுகிறது.

# இதுவும் ஆணாதிக்கமே



தமிழ் சினிமாவில் பிரபலமான நடிகையாக பிரியா பவானி சங்கர் வலம் வருகிறார். அஜய் ஞானமுத்து இயக்கத்தில் அருள்நிதி உடன் டிமான்டி கொலனி 2 படத்தில் நாயகியாக நடித்துள்ளார். சமீபத்தில் இவர் நடிப்பில் வெளியான ரத்னம், இந்தியன் 2 ஆகிய படங்கள் தோல்வி அடைந்ததுடன் அவரின் நடிப்பு பற்றியும் நிறைய கேலி, கிண்டல் வலைதளங்களில் வந்தன. இதுபற்றி அவர் கூறுகையில் : சிரித்துக் கொண்டே ஒருவரை திட்டுவது எப்படி என எனக்கு புரியவில்லை.

ஒருவரை அதிர்ஷ்டமில்லாதவர் எனக் கூறுவது சரியானது அல்ல. அது அவரையும், அவரை பெற்றவர்களையும் பாதிக்கும். படங்கள் சரியாக போகவில்லை என நாயகனைப் பார்த்து யாராவது அதிர்ஷ்டமில்லாதவர் என கூறியது உண்டா? இதுவும் ஒருவகையான ஆணாதிக்கம் தான். பெரிய படங்கள் எனக்கு அதிர்ஷ்டத்தால் வரவில்லை, திறமையால் வந்தது என்றார்.

# அடுத்த சுற்றுக்கு தயாராகும் சினேகா



திருமணத்திற்கு பிறகு ஜோதிகா, மஞ்சு வாரியர், பிரியாமணி உள்ளிட்ட பல நடிகைகளும் சினிமாவில் மீண்டும் பிசியாக நடித்து வருகிறார்கள். இந்த நிலையில் திருமணத்திற்கு பிறகு சில படங்களில் நடித்த சினேகாவுக்கு தற்போது எதிர்பார்த்தபடி பட வாய்ப்புகள் இல்லை.

இந்த நிலையில் தற்போது வெங்கட் பிரபு இயக்கி உள்ள ?கோட்' படத்தில் அப்பா விஜய்க்கு ஜோடியாக நடித்திருக்கிறார் சினேகா. அதனால் இந்த படம் தனக்கு ஒரு கம்பேக் படமாக அமையும் என்று எதிர்பார்க்கும் சினேகா, புதிய படங்களில் நடிப்பதற்கும் முயற்சி எடுத்து வருகிறார்.

அதோடு, தனது உடல் எடையை குறைத்து பிட்டாக தன்னை மாற்றும் முயற்சியிலும் அவர் தீவிரம் காட்டி வருகின்றார் . இதற்காக தீவிர பயிற்சியில் இறங்கி இருக்கும் சினேகா, ஜிம்மில் வியர்வை சொட்ட சொட்ட நனைந்தபடி தான் பயிற்சி செய்யும் ஒரு வீடியோவையும் இணைய பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

தாயகத்தில்... வவுனியாவில் அமைந்துள்ள
"பண்டாரவன்னியன் புத்தகசாலையில்"
ஈழத்துப் புத்தகங்களை நீங்கள் பெறமுடியும்.

தொடர்புகளுக்கு:
பண்டாரவன்னியன் புத்தகசாலை
வவுனியா, இலங்கை
+94772244616
youtube@akkakuruvi

இது வெற்றிமணியின்
ஒரு இலவச விளம்பரம்.
நம் இளஞர்கள்
முயற்சிக்கு
கைகொடுப்போம்!

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.


Jasmine Silk House
ஆடைகளின் ராணி
பட்டுச் சேலைகளுக்கும், பஞ்சாபிகள்,
குருத்தாக்கள், பாட்டிசாறிகள்,
மற்றும் இமிரேசன் நகைகளுக்கும், நிறைவான
தெரிவுகளில் எம்மிடம் கிடைக்கும்
“ என்றும் புதியது
ஆடைகள் என்றும் புதியது ! ”
Tel: 02102 844744
HP: 0173 1937 325
"Jasmine Silk House" Fester Str.50- 40882 Ratingen


Kfz-Ingenieurbüro
NADANAM
Sachverständiger | Unfallgutachter
SIE HATTEN EINEN UNFALL? WIR HELFEN!
வாகன விபத்தா? உங்களில் தவறு இல்லையா?
கட்டணம் எதுவுமின்றி நாங்கள் உதவுகிறோம்!
விபத்தினால் ஏற்பட்ட சேதத்திற்கான தொகையை
மிகக் குறுகிய காலத்துக்குள் மதிப்பீடு செய்து தருவோம்.
உடனே எங்களை நாடுங்கள்.
B.Eng. Diesanth Nadanapatham
0175 5086977


PIRRUNTHA SILKS
Exclusive Indian Clothing & Jewelry
Ludwig str.87a
70197
Stuttgart
SALE
தரம்மிக்க தங்க நகைகள்
நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில்
அமைந்த சேலைகள்
மற்றும் இமிடேசன்
நகைகள் அனைத்திற்கும்
நீண்ட கால நம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
Stuttgart நகரில்...
Tel: 0711 615 8976/ 0170 334 4059


KANTHAN
JEWELRY MARKT
காந்தன் தங்க நகை மாடம்
தரமான தங்க நகைகள்
புத்தம் புது டிசைன்களில்
எம்மிடம் கிடைக்கும்.
RHEINISCHE STR. 72 / 44137 / DORTMUND / GERMANY
0172 8684 203 / 0231 5898 7828 /
யேர்மனி டோட்முண்ட் நகரில்
பொன் ஒளி வீசும்
காந்தன்
தங்க நகை
மாடம்


FRANKFURT நகரில் புதிய உதயம்
இலங்கை,
இந்தியாவிற்கான
விமான சிட்டைகள்
குறைந்தவிலையில் துரிதமாக
பெற்றுக்கொள்ள
TRUST TRAVELS Reisebüro
Inhaber : ஜெயக்குமார் வினோத்குமார்
TRUST TRAVELS
அத்துடன் துரித
பணப்பரிமாற்று
சேவையையும்
பெற்றுக்கொள்ளுங்கள்


Lido a Casa
...online bestellen auf
www.lidoacasa-ms.de


Jaffna Super markt
Lebensmittel aus Asien, Afrika,China und Orient
WELCOME IM Jaffna SUPER.MARKT
எம்மிடம் நம்பி வாங்கோ!...
சந்தோசமாகப் போங்கோ!!...
Tel:0179 2310 560
Wolbecker Str.16a 48155 Münster (Eingang von Bremer Platz neben Parkhaus Ausgänge)